Phone No. 4502
விலை அணா ஒன்று]

Regd. No. M. 5458
[இலங்கை 9 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAIMANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மணி 1] சென்னை (28—12—49) வெளியூர் (29—12—49) [இதழ் 128

இலக்கியம்-கலாசாரம் காக்க இலங்கைத் தமிழர் இணைந்தனர்

சுதந்தர சுயமரியாதை வாழ்வுக்கு அடிகோல தனிக்கட்சி

அநீதிகளை யேற்று, ஆபத்துக்குள்ளாகார்!

வெள்ளையரின் ஒற்றையாட்சிமுறை இனியும் நீடிப்பதா?

"நாம் இன்று கூடுவதுமற்ற இனத்தாரது அரசியல்-பொருளாதார சுதந்திரத்தை ஆக்கிரமிப்பதற்கல்ல; நமது மொழியையும் நாட்டையும் அரசியல் பொருளாதார சுதந்திரத்தையும் காப்பாற்றும் பொருட்டாகும் தமிழ்ப் பண்பாடு, தமிழிலக்கியம், தமிழர் கலாசாரம் ஆகியவற்றை மற்றவர்களின் ஆதிக்கத்திலிருந்து அழிந்து போகவிடாமல் காப்பாற்றுவதற்காகவே நாம் இங்கே கூடியுள்ளோம்" என்பதாகக் கொழும்புவில் நடைபெற்ற 'இலங்கைத் தமிழரசு கட்சி' துவக்க விழா மாநாட்டில் பிரதிநிதிகளை வரவேற்றுப் பேசிய தோழர் எம். திருவிளங்கம் குறிப்பிட்டார்

"நமது போராட்டம், தமிழ் பேசும் தேசீய இனத்தின் பூரண சுதந்தரத்தை அடிப்படையாகக்கொண்டது. அது முற்றும் மக்கள் நலனுக்காக மக்களால் பெறவேண்டுமென்ற லட்சியத்தைக்கொண்டதே

இந்த அடிப்படையில் ஐக்கிய இலங்கைச் சமஷ்டியின் ஒரு அங்கமாக மொழிவாரியாகக் கொண்ட ஒரு சுதந்திரத் தமிழரசை நிறுவி, தமிழ் பேசும் மக்களின் விடுதலையைக் காணுவதே எமது நோக்கம்"

இவ்வாறு கொழும்பு அரசாங்க குமாஸ்தாசேவாமண்டபத்தில் நடந்த "இலங்கைத் தமிழரசுக் கட்சி" டிச. 8-ல் துவகக விழா மாநாட்டில் தோழர் எஸ். ஜேவி செல்வநாயகம் எம். பி. நிகழ்த்திய தலைமையுரையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:—

"இன்று இலங்கைத் தமிழர் சமுதாயத்தின் சரித்திரத்திலே ஒரு சுபதினம், இலங்கையின் பல பகுதிகளிலிருந்தும் பிரசன்னமாகியிருக்கும் தமிழ்ப் பெரியார்களின் முன்னிலையிலே வீறுகொண்டெழுந்து நிற்கும் வீரயுவர்கள் சாட்சியாக தமிழ் அரசுக் கட்சி இன்று ஆரம்பமாகிறது. நமது காலத்திலே, நமது கண் முன்னே எங்களது இலட்சியம் நிறைவேறாதுபோனாலும், வரவிருக்கும் பிற்கால சந்ததிக்காவது அந்தப் பாக்கியம் கிடைக்கட்டும்; நமது பிள்ளைக் குட்டிகளாவது சுதந்திரப் பிரஜைகளாக வாழட்டும். கடைசியில் எதைத்தான் நம்மால் சாதிக்க முடியாது போனாலும் போகட்டும், விடுதலை ஆர்வங்கொண்டு எழுந்துள்ள இன்றைய புவர்களைக் கை தூக்கி விடுவதில் நாம் உழைத்து மாளுவோம்"

மாநாட்டுப் பிரதிநிதிகளை வரவேற்றுப் பேசிய வரவேற்புக் கமிட்டித் தலைவர் டாக்டர் எம். திருவிளங்கம் கூறியதாவது:—

நாம் இன்று கூடுவது மற்றும் இனத்தவரது அரசியல்—பொருளாதார சுதந்திரத்தை ஆக்கிரமிப்பதற்கல்ல, எனினும் நமது மொழியையும் நாட்டையும் அரசியல், பொருளாதார சுதந்திரத்தையும் காப்பாற்றும் பொருட்டாகும். தமிழ்ப்பண்பாடு, தமிழிலக்கியம், தமிழர் கலாச்சாரம் ஆகியவற்றை மற்றவர்களின் ஆதிக்கத்திலிருந்து அழிந்து போக விடாமல் காப்பாற்றுவதற்கே நாம் இங்கே கூடியுள்ளோம். இந்த அரும்பெரும் முயற்சியை நடைமுறையில் கொண்டு செல்லும் பொறுப்பு உங்களுடைய கடமையாகும்"

அவர் மேலும் கூறியதாவது:— இலங்கையிலே தமிழ் பேசும் சாகியத்தாருக்கு ஏற்பட்டிருக்கும் இந்த நெருக்கடியான கட்டத்தை மேற்கொள்ள உங்களைப் போன்ற தன்னலங் கருதாமையும், தியாக சிந்தையும் கொண்ட சேவையாளர்களே வேண்டும் நீங்கள் இந்த இயக்கத்தை மேற்கொண்டு சமஷ்டி அரசியலையும், அதனுல் ஐக்கிய இலங்கையையும ஸ்தாபிக்க தியாக சேவை செய்வது மட்டுமல்ல, இலங்கை சரித்திரத்திலே முதன் முதல் சத்தியாக்கிரகத்தையும், மொழி வாரிப் போராட்டத்தையு நடத்த முன் வந்திருக்கிறீர்கள்"

பின்பு செனட்டர் டாக்டர் நாகநாதன் கழக அமைப்பு விதிகள் பற்றி பேசுகையில்: நாம் இன்று ஆரம்பிக்கும் கட்சி. ஆடம்பரத்திற்காகவும், அழகான கட்சியொன்று எங்களிடம் இருக்கவேண்டுமென் பதற்காகவும் ஆரம்பிக்கப்பட—

[தொடர்ச்சி 6 பக்கம் பார்க்க]

இழந்த பகுதிகளை மீண்டும் பெறுவோம்

—(0)—

சவர்க்கார் சல்லடங் கட்டுகிறார்!

அகிம்சா மூர்த்திகளுக்கு அர்ப்பணம்!

"நாம் பதிலுக்குப் பதில் நடவடிக்கை எடுக்கவேண்டும், பாகிஸ்தானுடன் சமரசம் செய்து கொள்வது அசாத்யம். நமது நிலைமையைப் பலப்படுத்திக்கொள்வது மக்களின் கடமையாகும். பாகிஸ்தானுடன் சமரசம் செய்து கொள்வது அசாத்தியம். தமது நிலைமையைப் பலப்படுத்திக்கொள்வதுமக்களின் கடமையாகும். அவ்விதம் செய்தால், நாம் இழந்த பிரதேசங்களை இன்னும் 3, 4 ஆண்டுக்குள் மீண்டும் பெற்றுவிடலாம்'

என்று தோழர் சவர்க்கார் அண்மையில் நடைபெற்ற இந்துமகா சபையில் பேசியபோது குறிப்பிட்டிருக்கிறார்.

பாகிஸ்தான் இந்திய இழந்த பிரதேசமாம். ஆகவே, அதை [illegible] இன்னும் 3, 4 ஆண்டுகளில் மீட்டுவிட வேண்டுமாம் அதற்கு சமரசம் வழியல்லவாம். பதிலுக்குப் பதில் ஏதேனும் செய்தாக வேண்டுமாம்! இது தான் தோழர் சவர்க்காரின் கருத்து.

பாகிஸ்தானுக்கும் இந்துஸ்தானுக்குமிடையே நல்லுறவு ஏற்பட வேண்டும். [illegible] கொள்கையை அனுசரித்தேனும், இவ்விரு உபகண்டத்தில் அமைதி நிலை வழி கோலவேண்டும் என்றெல்லாம் பேசினார் காந்தியார். இதற்காக அவருடைய உயிரையே குடித்தது கோட்ஸே கும்பல்.

இன்னும் எந்த நோக்கத்துக்காக காந்தியார் உயிர் துறந்தாரோ, அதே நோக்கத்தை அழிக்க வழிதேடுகிறார் தோழர் சவர்க்கார். பழிவாங்கும் மனப்பான்மை கூடாது என்றார் காந்தியார்; பழிவாங்கும் பணியை மேற்கொண்டேனும் இந்துஸ்தானை மேலும் அகண்ட இந்துஸ்தானாகச் செய்ய வேண்டுமென்கிறார் சவர்க்கார். பாகிஸ்தான் பிரிக்கப்பட்டது என்பதை மறைத்து இந்தியா [illegible] இழந்த ப[illegible] [illegible] என்றும், எனவே, அதனை மீண்டும் பறிக்க வேண்டும் என்றும் பேசுவரன் மூலம் வம்பை விலைக்கு வாங்கப் பார்க்கிறார் அவர்.

இப்படிப்பட்ட பேச்சு, மதச் சார்பற்ற சர்க்காரிலே, அதுவும் அதன் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ள சர்க்காரிலே, சாந்த நோக்கம் கொண்டவர் எனப் புகழப்படும் நேரு சர்க்காரிலே, இந்த ஜனநாயக காலத்திலே, பேசப்படுகிறது! இதற்கு இந்த ஆட்சியாளர் இடங்கொடுத்துக் கொண்டிருக்கின்றனரென்றால், எங்ஙனம் இந்நாட்டில் அமைதி நிலவ முடியும்?

இந்துமகா சபை, இவ்விரு உபகண்டத்தை இந்துக்களின் ஏகபோக சொத்து என்று கருதிக் கொண்டு, இங்ஙனம் பேசிக் கொண்டிருப்பது ஆபத்தானது. இதனை அரசியலார் உணர்ந்து ஆவன செய்யாவிடில் கேடு நடக்கும் பெறும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

வியாபாரத்துறையிலும் தொல்லை

மலான் ஆட்சியில் இந்தியர் படும் அவதி

ஜோஹென்னஸ்பர்க் டிச, 27—

தென்னாப்பிரிக்க சர்க்கார் வாழைப்பழம் இறக்குமதி பர்மிட்டுகளைக் கொடுத்திருப்பதின் மூலம், ஐரோப்பிய கள்ள மார்க்கெட்காரர்களிடமிருந்து தங்கள் வாங்கியாக வேண்டியிருக்கிறது என்று இங்குள்ள பிரபல இந்திய வியாபாரிகள் கூறுகின்றனர்,

25 ஆண்டு காலமாக வியாபாரத்துறையிலுள்ள இந்தியர் தோழர்மித்ரா கூறுகையில் இறக்குமதி கண்ட்ரோலுக்கு முன்தான் ஏராளமாக இறக்குமதிசெய்து வந்ததாகவும் இப்பொழுது மிக மிக தன் வியாபாரம் இறக்குமதி கண்ட்ரோலால் குறைந்து விட்டதாகவும் கூறுகிறார். தொழிலில்லாதவர்களுக்கெல்லாம் புது பர்மிட்டுகள் கொடுக்கப்படுகின்றனவாம்.

வாழைப்பழத்திற்கு ஏக கிராக்கி ஏற்பட்டிருக்கிறதென்றும் கள்ளமார்க்கெட்டில் வாங்கி கண்ட்ரோல் விலைக்குவிற்கவேண்டிய அவதி ஏற்பட்டிருக்கிறதென்றும் அவர் கூறுகிறார்.

அனுமார்க் கோவில் பிரசாதத்தின் 'ஆட்கொள்ளும்' திறன்!

—:(0):—

ஒரு பெண் மரணம்: 35 பேருக்குமயக்கம்

தஞ்சைக் கோவிலில் கடந்த 23-ந் தேதி யன்று கொடுக்கப்பட்ட 'பிரசாதத்தை' உட்கொண்டதின் விளைவாக, 35 'பக்தர்கள்' வரை பாதிக்கப் பெற்று, வாந்தியும் பேதியும் நேரிட்டு, ஒரு இளம் பெண் இறந்துவிட்டதாகவும் அறியப்படுகிறது. அனுமார்க் கோவிலில் அமாவாசையன்று இரவு நடந்த திருவிழாவையொட்டி யாவருக்கும் 'புளியோதுரை' வழங்கப்பட்டதாம். அதைச் சாப்பிட்டோருள் 35 பேர் இவ்விதம் பாதிக்கப்பட்டுள்ளனராம். இவர்களில் 25 பேர்வரை மருத்துவ விடுதியிலிருந்து கொண்டே சிகிச்சைப் பெறுகின்றனராம். இதன் காரணத்தைக் கண்டறிய சுகாதார அதிகாரிகள் தீவிர முயற்சி செய்துவருகின்றனராம்.

கராச்சியில் ஜின்னுநாள்

காயிதே அஸாம் மஹமது அலி ஜின்னாவின் பிறந்த நாளாகிய டிச. 24-ந்தேதியன்று அன்னாரது நினைவையொட்டி கராச்சியில் பாராட்டுப் புகழுரைகள் வழங்கப்பட்டன.

காயிதே அஸாம் பாகிஸ்தான் தலைவர் மட்டுமல்ல, ஈரான் உள்ளிட்ட இதர இஸ்லாமிய உலகுக்கும் மதிப்புமிக்க தலைவராவாரென்று ஈரானிய அரசப் பிரதிநிதி தோழர் அலி கின்ஸார் [illegible] கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

ஜின்னாவின் தீரம், விடா முயற்சி, தளராவுள்ளம் இன்ன பிற நம் மாணவர்களுக்கும் வரவேண்டுமென தோழர் கிரிஷ்ணா சட்டோபாத்யயர் (அரசியலமைப்பு சபை எதிர்க்கட்சித் தலைவர்) குறிப்பிட்டார்.

மாலை மணி

சென்னை 28—12—49 புதன்கிழமை

திருச்சி அழைக்கிறது!

தென்றிசைத் திருச்சியைப் பார்க்கிறோம்! எம் சிந்தையெல்லாம் தோள்களெல்லாம் பூரிக்குதடடா! திருச்சி மாவட்ட முன்னேற்றக் கழகத்தினர் கூடுகின்றனர், இருவண்ண இலட்சியக் கொடியின் நிழலிலே! மாநாடு கூடுகின்றனர்! முன்னேற்றக் கழகத்தினர் கூடுகின்றனர்! முதல் முதலாகக் கூடுகின்றனர்! வரலாற்றிலேயே முதன் முதலாகத் திரளுகின்றனர்! அந்தச் செய்தி உளமெலாம் குளிர்ச்சி செய்கிறது; மகிழ்ச்சி வெள்ளத்தைப் பாய்ச்சுகிறது!

'புரட்சி ஓங்குக, இழிவு ஒழிக' என்ற இலட்சியக் கருத்தை, ஒலியால் அல்ல, தன்னிரு வண்ணத்தால் காட்டி நிற்கும் முன்னேற்றக் கழகக் கொடி, திருச்சி மாவட்டத்தாரை மட்டுமல்லாமல், திராவிட மெங்கு மிருந்தும் திரண்டு வரும் முன்னேற்றக் கழகத்தினர் அனைவரையும், "வாரீர், வாரீர்" என்று வரவேற்று, வான்வெளியில் அழகுற அசைந்தாடும் அங்கே! அந்தக் காட்சியை எண்ணுந்தோறும் எண்ணுந்தோறும், உவகை உணர்ச்சி உள்ளத்தில் ஊற்றெடுக்கிறது!

மாசற்ற மனமும், மாண்புறு பண்பும், கலங்கமற்ற உழைப்பும், காண்போர் "போற்றும் போக்கும், வற்றா உணர்ச்சியும், வளங்கெழு உறுதியும் கொண்ட திராவிட முன்னேற்றக் கழகத்தினர், முதன் முதலாக அங்கு கூடுகின்றனர். அந்தக் கூட்டம், அல்ல, அல்ல, மாநாடு ஓர் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. கடமையாற்றுவதில் களிகொண்டுள்ள இளைஞர்கள், அரிய கருத்துக்களைக் கேட்க ஆவலுறும் மாணவர்கள், கனவை நனவாக்கிப் பார்க்க விரும்பும் வயோதிகர், நாட்டைத் திருத்தும் பணியில் பற்றுக்கொண்டு பாடுபட முன்வந்திருக்கும் வீராங்கனையர்-சுருங்கச் சொல்லின் கொள்கைப் பற்றும், பொதுநல நோக்கமும், தூய்மையுள்ளமும் படைத்த அனைவரும் அந்தத் திருச்சி மாநாட்டுப் பாசறையில் வந்துகூட இருக்கின்றார்கள்;

திருச்சி மாநாட்டுப் பாசறைக்கு வரவேற்புக் குழுவினர் இட்டிருக்கும் பெயர், ஆசிரியர் வேலாயுதம் பந்தல்! ஆசிரியர் வேலாயுதம் களங்கமற்று கடமையை ஆற்றிக், கடமையை ஆற்றும் முயற்சியிலேயே தன் உயிரைப் பலி கொடுத்த மாவீரராவார். தன் உயிருக்கு எப்பொழுதும் ஆபத்து உண்டு என்பதைத் தெரிந்திருந்தும், கடமையை ஆற்ற அம்மாவீரன் பின் வாங்கவில்லை. மாநாட்டில் கூடும் அனைவர் உள்ளத்திலேயும் அம்மாவீரனுக்கமைந்த

கடமையுணர்ச்சி படியும் என்பது திண்ணம்.

திருச்சி மாநாடு மற்றொரு தனிச்சிறப்பையும் பெற்றிருக்கிறது. திருச்சி மாநாட்டை ஒட்டி, திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுக்குழுவும் கூடுகிறது. பொதுக்குழு உருவானதற்குப் பிறகு இப்பொழுது தான் முதன் முதலாகக் கூடுகிறது, கழகத்தின் எதிர்காலத்தை இன்றைய நிலையிலிருந்து நோக்க. கீழ்ச் செயல்களுக்காகக் கொள்கையை விட்டுக்கொடுக்க மனமில்லாமல், வலிய உரத்தோடு நின்று, கண்ணியத்தோடு முன்பிருந்த கழகத்தை விட்டு வெளியேறிய-சிந்திக்கும் ஆற்றல் படைத்த—கொள்கையில் இடையறாப் பற்றுக்கொண்ட உயிர்நாடிகளெல்லாம், மாநாட்டிற்கு முதல் நாள் திருச்சியில் கூடுகின்றன. இந்நிகழ்ச்சிகள் வரலாற்றுச் சிறப்பு பெறும் என்பது உறுதி!

திராவிட முன்னேற்றக் கழகம், நீதிக்கும்-நேர்மைக்கும் இருப்பிடம் என்பதை நாட்டு மக்கள் நன்கு உணர்ந்து கொண்டு வருகின்றனர். நாடு, நகரம், பட்டி, தொட்டிகளிலெல்லாம் கழகக்கிளைகள் தழைத்தோங்கி வருகின்றன. செய்த கடமையை உணரவும் செய்யப்போகும் கடமையைச் சிந்திக்கவும் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த முன்னேற்றக் கழகத்தினர் மாநாடு கூடுகின்றனர். நாட்டின்-மக்களின், நலிவையும்-குறைவையும் - குற்றத்தையும் போக்கும் திட்டங்கள், தீர்மானம் மூலமாகத் தயாரிக்கப்படும் என்று நம்புகிறோம்; தயாரிக்கவேண்டும் என்று வற்புறுத்துகிறோம்.

மாநாட்டின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கும் தோழர் வள்ளிமுத்து அவர்களும், துவக்கி வைப்பவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் தோழர் பி. பழனிசாமி அவர்களும் உடலுரம் படைத்த-உறுதி உள்ளம் படைத்த-மறத்தமிழ் மாண்பு பூண்ட மாவீரர்களாவார்கள். வரவேற்புத் தலைவராக இருக்கும் தோழர் சங்கரன் அவர்களும் அந்த வழியில் வந்தவரே. முடுக்கான தோற்றமும், முறுக்கான போக்கும், தெளிவான சிந்தனையுங் கொண்ட அம்மூவரால் மாநாடு இனிது நடந்தேறும். அந்த நம்பிக்கை நமக்கு நிரம்ப இருக்கிறது.

இரவு நடத்திக்காட்டப்படும் "சந்திரமோகன்" நாடகம் ஆதிக்கவகுப்பினரின் அட்டகாசத்தையும், மாவீரன் ஆற்றல் அடிமைப்பட்ட வரலாற்றையும் எடுத்துக் காட்டிப், பார்ப்போர்க்குப் புத்துணர்ச்சியூட்டும் தன்மை வாய்ந்ததாகும்.

பிரசாரக்குழுவில் இணைந்து நிற்கும் சொற்பொழிவாளர்களில் பெரும்பாலோரும், மாநாட்டில் கலந்து கொள்

கூறுகள் என்றால், அரிய கருத்து விருந்து, கலந்துகொள்வோர் அனைவருக்கும் கிடைப்பதற்கரிய முறையில் கிடைக்கும் என்பது தெளிவு!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் முதல் மாநாடு-திருச்சி மாவட்டத்தின் முதல் மாநாடு-1950-ம் ஆண்டின் முதல் நாளில் கூடுகின்றது. புத்தாண்டுப் பிறப்பில் புதுமுறுக்கோடு கூடுகிறது மாநாடு! அதற்காகக் குறிப்பாகத் திருச்சி மாவட்டத்தாரையும் பொதுவாகத் திராவிடத்தின் திக்கெட்டுமுள்ளோரையும் திருச்சி அழைக்கிறது! பெருங்குரல்கொடுத்து அழைக்கிறது! இருவண்ணக் கைகள் நீட்டி அழைக்கிறது! செல்வோம் வாரீர்! என்று நாம் அழைக்கிறோம்.

திருச்சி மாவட்ட தி. மு. கழக மாநாடு

மாநாட்டு வேலைகள் திறம்படவும் விரைவாகவும் நிறைவேறிக் கொண்டுவருகின்றன. மாநாட்டுப் பந்தல் மிக விரிவான முறையில் சுமார் 20000 பேர்கள் அமரும்படியான வகையில் போடப்பட்டு வருகிறது. மாநாட்டுப் பந்தல் முகப்பையும் உட்புறங்களையும், மேடையையும் அழகுபடுத்தும் வேலைகளில் அலங்கரிக்கும் குழுவினர் ஈடுபட்டுள்ளனர். முகப்பு கோட்டைக் கொத்தளங்கள் அமைந்தன போல ஆக்கப்பட்டுள்ளது.

வெளியூர்த் தோழர்கள் தங்குவதற்கு வேண்டிய வசதிகளும், உணவு சம்பந்தமான வேலைகளும் உணவுக் குழுவினர் நன்கு கவனித்து வருகின்றனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் முதல் மாநாடு ஆகையால், வெளியூர்களிலிருந்து ஆயிரக்கணக்கான தோழர்கள் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திருச்சி மக்களிடத்தில் நல்லதொரு எழுச்சி காணப்படுகிறது.

து. மா. வனமாமலை,
விளம்பரச் செயலாளர்
தி. மா. தி. மு. கழக மாநாடு.

விமானத்திலேயே கொண்டாட்டம்

லண்டன், டிச. 27—

கிருஸ்துமஸ் பண்டிகையன்று அட்லாண்டிக் மீது பறந்து கொண்டிருந்த விமானத்திலுள்ள 50 பிரயாணிகள், விருந்து நடனம் முதலியவைகளை விமானத்திற்குள்ளேயே கொண்டாடினர். இதேமாதிரி அன்று விமானத்தில் பிரயாணம் செய்தவர்கள் கொண்டாடியதாகத் தெரிகிறது.

அறிவுக் கதிர்!

சாந்தியால் உலகம்
தழைப்பது நன்றா?
சமயபேதம் வளர்த்தே
தளர்வது நன்றா?
மாந்தரிற் சாதி வகுப்பது சரியா?
மக்கள் ஒரே குலமாய்
வாழ்வது சரியா?

—பாரதிதாசன்

புதுக்கோட்டையில்

★ சந்திரமோகன் ★

30-12-49 வெள்ளியன்று
பிரகதாம்பாள் தியேட்டரில்
இரவு 9-30 மணிக்கு நடைபெறும்
தோழர்கள் சி. என். அண்ணாதுரையும்,
கே. ஆர். இராமசாமி, ஈ. வெ. கி. சம்பத்
ஆகியோர் நடிப்பார்கள்
கட்டணம் (வரியுட்பட):— ரூ. 5, 3, 1.

இலக்கியம் கலாசாரம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டதல்ல. இந்நாட்டைத் தாய்நாடாகக் கொண்டு, இங்கே வாழும் தமிழ் பேசும் மக்கள் அரசியல் அனாதைகளாய், அநியாயச் சட்டங்களினால் அழித்தொழிக்கப்பட்டு, நாசமாவதைக் காணச் சகியாத மனத்தாங்குதலின் பேரில் தான் அமைக்கிறோம். ஆகவே, இதனை இந்தக் கட்சி மாநாட்டிற்கு ஆயிரக்கணக்கான மக்கள் கூட வேண்டுமென்று நாங்கள் விரும்பவில்லை. ஐந்து பேராகவிருந்தாலும் ஐம்புலன்களையும் எங்கள் இனத்தின் விடுதலைக்கே அர்ப்பணிப்போமென்ற பரந்த எண்ணம், விரிந்த மனப்பான்மை கொண்டவர்களாயிருக்க வேண்டுமென்று கனவு கண்டேம். நமது எண்ணம், குறிக்கோள், கொள்கைகளெல்லாம் ஒன்றாக இருக்க வேண்டும். கூடிய சீக்கிரத்தில் நம் கண்ணெதிரில் நம் விடுதலையின் சுகத்தை நாம் காண முடியும்.

நம் கொள்கையை நாடெங்கும் பரப்புவோம், அதற்காக உழைப்போம். அதை அடையும்வரை எங்கள் போராட்டம் தணியப் போவதில்லையென்று திடசங்கற்பம் செய்வோம்.

கீழ்க்காணும் தீர்மானம் மேற்படி மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன.

இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களுடைய விடுதலைக்காக உழைக்கும் ஊழியர்கள் 1949 ஆண்டு டிசம்பர் மதம் 18-ந் தேதியாகிய இன்று மருதானை அரசாங்க குமாஸ்தா சேவை மண்டபத்தில் கூடியிருக்கும் இம்மகாநாடானது, ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளைப் பேசும் மக்கள் வாழும் நம் நாட்டிற்குப் பொருத்தமற்ற ஒற்றையாட்சி அமைப்பின் கீழ், இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள், மென்மேலும் கீழ் நிலையுற்று வருவதை நன்குணருகிறது. மேலும் தமிழ் பேசும் மக்கள், எதிர்காலத்திலும் இந்நாட்டில் சுயாதீனத்துடனும், சுயமரியாதையுடனும் வாழ்வதற்குப் பாதகமான விதமாய் இன்றைய அரசாங்கம் வகுத்து வரும் சட்டங்களினாலும், ஆற்றி வரும் கருமங்களினாலும் தமிழ் பேசும் மக்களுக்கு ஆபத்து ஏற்பட்டு இருப்பதை

அறிகிறது. இலங்கையின் ஒற்றுமைக்குப் பாதகம் ஏற்படாதவாறு இப்பிரச்னைகளைத் தீர்ப்பான ஜனநாயக முறையில் தீர்க்க ஓரே வழி, ஐக்கிய இலங்கைச் சமஷ்டியில் ஓர் அங்கமாக ஒரு சுதந்திரத் தமிழரசை நிறுவுவதேயென்று தெளிவாகத் தெரிகிறது. ஆகவே, இந்நாட்டில் வாழும் தமிழ் பேசும் மக்களின் சுய நிர்ணய உரிமையை நிலைநாட்டுவதன் மூலம், அவர்களுடைய இலக்கிய சுதந்திரத்தைப் பெறுவதற்கு இடைவிடாது உழைக்கும் பொருட்டு, இலங்கைத் தமிழரசுக் கட்சியென்ற பெயரில் இம்மாநாடு ஒரு அரசியற் கட்சியாக அமைந்துகொள்கிறது.

ஜனவரி 15-ல் ஆந்திர மாகாணம்

ஆந்திர மாகாண நிறுவனத்தையனுசரித்து அமைக்கப் பெற்றிருக்கும் பிரிவினைக் கமிட்டி தனது வேலையை 1950 ஜனவரி 1-ந் தேதிக்குள் முடித்துவிடுமென்று தெரிகிறது. 1950 ஜனவரி 1-ல் கூடும் சென்னை மந்திரி சபை பிரிவினைக் கமிட்டியின் அறிக்கையைப் பரிசீலனை செய்து, முடிவு கட்டுமென்று தெரியவருகிறது.

1950 ஜனவரி 15-ந் தேதி முதல் தனி ஆந்திர மாகாணம் நிர்வாகம் துவக்கும் வகையில் ஏற்பாடுகள் உருவாகலாமென நம்பப்படுகிறது.

பிரிட்டனில் பழங்காலப் புதை பொருள்கள்

லண்டன், டிச. 27—

பிரிட்டனில் போரின்போது குண்டுவீழ்ந்து நாசமான கட்டிடங்கள் இடிக்கப்பட்டு, அங்கு புது கட்டிடங்களுக்காகத் தோண்டப்படுகையில், ரோமர்கள் ஆண்ட காலத்திய சின்னங்கள் பல அகப்பட ஆரம்பித்திருக்கின்றன. ரோமர்கள் உபயோகித்த மேஜைகள் அவர்கள் உபயோகித்த குளிக்கும் தொட்டிகள் முதலியவை இப்பொழுது கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. லண்டனில் இவை கண்காட்சிக்காக வைக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

[கற்பனை உரையாடல் :]

கண்டதும் கேட்டதும்

[கப்பறிவோன்]

உரையாடுவோர் : சுப்பு சாஸ்திரிகள், ரங்காச்சாரி.

இடம் : செயின்ட்மேரிஸ் ஹால், சென்னை

காலம் : மாலை.

சுப்பு : ஓய்! நீர் எங்கெங் காணும் வந்தீர், வந்து ரொம்ப நேரமாச்சோ?

ரங் : நோ-நோ, இப்ப தான் வந்தேன்.

சுப்பு : ஏன் இவ்வளவு லேட்?

ரங் : லேட்டுமில்லை... கீட்டுமில்லை, ஆபீசை விட்டு ஆத்துக்கு போனேன். ஹவுஸ் லாக் பண்ணியிருந்தது! ஆத்துக்காரி எதிராத்துக்கு பக்கத் தாத்துக்குப்போயிருப்பான்னு நெனசுண்டு, பக்கத்தாத்து பாலுவைக் கூப்பிட்டு, "டேய் அம்பி. மாமி எங்கே போனா தெரியுமாடா"ன்னு கேட்டேன். அவன் சொன்னான், "எதிராத்துமாமா"வும்மாமியும் தமிழிசைக் கச்சேரிக்கு போனாள், அவாளோடே மாமியும் போனாள், பார்த்தேன்னு" சரின்னு உடனே புறப்பட்டு இங்கே வந்தேன்.

சுப்: பார்த்தயளோ?

ரங் : இந்தக் கூட்டத்திலே எங்கே தேடறது. ஒரு வேளை பஸ்டு கிளாஸிலே (First class) உட்கார்ந்துண்டிருக்காளோ என்னவோ!

சுப் : ஏஸ்...ஏஸ். இருக்கலாம். எம். எஸ். கச்சேரியல்லவா? இதென்னங்காணும் பெரிய நீன்சா போயிடுத்து. எங்காத்திலேயும் இதே ட்ரபுள் தான் (Troule) போன வருஷம் பாகவதர் கச்சேரியும் போது, எங்க ராஜத்தைக் காணவேயில்லை. என்னண்டை சொல்லிக்காமலேயே அவளும் அந்த அடுத்தாத்துப் பட்டுவும் ஜாலியா கிளம்பி கச்சேரிக்கு வந்துட்டா...

ரங் : உம்... அப்புறம்?

சுப் : அப்புறம் என்ன...! சுத்தித் திரிஞ்சுட்டு நைட் ட்வல்வோ கிளாக்குக்கு (Twelve O' Clock) ஆத்துக்கு வந்து சேர்ந்தா!

ரங் : அட, அதுகிடக்கட்டும், இது நம்மவாளுக்கு சகஜங்காணும். உம்! அப்புறம என்ன விசேஷம்? கச்சேரி ஆரம்பமாகி ரொம்ப நேரமாச்சோ?

சுப் : நோ...நோ, அப்படியொண்ணுமில்லே.. முதல்லே பைரவி வர்ணம் பாடினு, நெக்ஸ்ட் (next) இப்பத்தான் கல்யாணி வர்ணம் பாடி முடிச்சா.

ரங் : ஓகோ! அதிருக்கட்டும், அன்னைக்கு உங்களோட பீச்சிலே மீட் பண்ணினது தானே... அப்புறம் பார்க்கவேயில்லை அல்லவா?

சுப் : ஆமாம்... ஆமாம். அந்தக் கான்பரன்சைப் பத்தி கூட பேசிண்டிருந்தமே.

ரங் : எஸ்...எஸ் எக்ஸாக்டிலி கரெக்ட்! (Exactly correct) உம்... அதிருக்கட்டும் நியூஸ் பார்த்தியளா?

சுப் : ஏன், என்ன விசேஷம்?

ரங் : டாக்டர் கேர் பேச்சு என்ன சேர்த்திபா இருக்கு பார்த்தியளோ?

சுப் : ஓகோ! கல்கத்தா கான்பரன்ஸ் பத்தி சொல்றியளா.

ரங் : ஆமாங்காணும்... ஆமாம்.

சுப் : ஆகா! என்ன ஸ்பஷ்டமா சொல்லிட்டார் பாத்தியளோ, ஆரியன் ரூல்தான் (Aryan rule) இந்தக கன்ட்ரிலே இருக்கணுமின்னு!

ரங்: வேறென்னங்காணும் இருக்கு. ஆப்ஜக்டே அது தானே!

சுப் : சரி சரி, கொஞ்சம் எழுந்து வாரும் வெளியே போயிட்டு வருவோம் முக்கியமான விஷயத்தையெல்லாம் இந்தக் கூட்டத்திலே யிருந்துண்டு பேசப்படாது ஒரு வர்ணம் பாடி முடியட்டும் அப்புறம் வருவோம். (இருவரும் எழுந்து வெளியே வருகிறார்கள்)

ரங்: சரி, கொஞ்சம்பொடி கொடுங்கோ, (பொடியை வாங்கி போட்டுக் கொண்டு) உம்...அதிருக்கட்டும் ஆரியனின்னு இப்படி ஓபனு (Open) பேசியிருக்காளே, பேசலாமா? நம்ம நேரு சர்க்கார் மதச் சார்பற்ற சர்க்காருண்ணு சொல்லிண்டிருக்கே!

சுப் : இருக்கட்டுமே, இருந்தா என்ன? அந்த பேச்சு ஒரு பக்கம்... இந்த பேச்சு ஒரு பக்கம். நமக்கென்ன ஆப்ஜெக்ட் நிறைவேற வேண்டியதுதானே?

ரங் : அது சரிதாங்காணு ஆனால் இந்த ஆரியன்-டிரவிடியன் கான்ட்ரவர்சி (controversy) பலமாயிடுமே!

சுப் : பலமாறதாவது மண்ணுங்கட்டியாவது! எல்லாம் காலப் போக்கிலே அடங்கிப் போகுங்காணும். எப்படியிருந்தாலும் நம்ம கவர்மென்ட் ஆரியனிஸத்தைத்தான் சப்போர்ட் பண்ணும். ஆனால், நேரிடையா செய்யாது. இந்த மாதிரி கான்ப்ரன்ஸ் மூலமா நாம் தான் கவர்மென்ட்டை அர்ஜ் பண்ணணும்.

ரங் : ஓகோ! அந்தப் பிராமண மாநாடு நடந்துச்சே, அதே மாதிரின்னு சொல்லுங்கோ.

சுப் : எஸ்...எஸ். யூ-ஆர்-கரெக்ட்! அது எப்படிக் காங்கிரசுக்கு வெளியே யிருந்து ஓர்க் பண்ணுச்சோ, அதே மாதிரி ஹிண்டுமகாசபை ஓர்க் பண்றது. காங்கிரஸ் கவர்மென்ட் சுர்மா பேருக்கு செகுலர் கவர்மென்ட், செக்குலர் கவர்மென்ட்டுண்ணு சொல்லிண்டிருக்க வேண்டியது தான்! இதெல்லாம் ஒரு தந்திரங் காணும்!

ரங் : ஆமாம் ஆமாம் : நன்னு சொன்னயள். அப்படியெல்லா மில்லாட்டாலும் சிட்சுவேஷனை சமாளிக்க முடியாது பாருங்கோ! நமக்குன்னு ஒரு கவர்மென்ட் இருந்தா இந்த பிராப்ளம்—நான் பிராமின் நான் பிராமின் கான்ட்ரவர்சியே ரெயிஸாயி இருக்காதேங்காணும்......

சுப் : அட, அவ்வளவு தூரம் போவானேன்... இந்த தமிழிசைச் சங்கந்தன் தோன்றியிருக்குமா! மியூசிக் பீல்டிலே (Music Field) நம்மோடே போட்டிக்கு வாவ இருப்பாளோ.

ரங் : அட, இதைத் தள்ளுங்காணும், இந்தத்தமிழிசை வந்துஇப்போஎன்ன கெட்டுப் போச்சு? பேர்தான் வித்தியாசமேயொழிய, இங்கேயும் நம்மவாளுக்குத் தானே ஆதரவு அதிகமா யிருக்கு? ஸ்ரீ ரஞ்சனி சபாவிலே பாடச்சே கொஞ்சம் அதிமா தியாகய்யர் கீர்த்தனை பாடுவா; இங்கே பாடச்சே பாரதி பாட்டிலே நாலு பாடினு சரியாப்போச்சு!

சுப் : அப்படிச் சொல்லாதீங்காணும் அங்கே ராம பஜனை, இங்கே நடராஜ பஜனை!

ரங் : சபாஷ்! நன்னு சொன்னியன்.

சுப் : வேறே என்னுங்காணும். நீரே பாருமே, தமிழிசை பேரிலே செட்டியார் பணம் அதிமாளங்கபோறது? எம். எஸ், டி. கே, அவ. இவ, பரதநாட்டியம், அது, இதுன்னு தானே செலவழியிறது.

ரங் : ஆமாம்... ஆமாம்; செட்டியார் ரொம்ப நல்லவர். அந்த சு. ம. காரப்போல இல்லாமே, எல்லோருக்கும் நல்லவராக நடந்துண்டு போறார்.

சுப் : வேறே அவர் தான் என்ன செய்வார்? அவருக்கு ஒரு ஆப்ஜெக்டா, மண்ணுங் கட்டியா கிடையாது. என்னமோ நாலு பேருக்கு கவுரவமா நடந்துக்கணும் அவ்வளவு தான்.

ரங் : அதுமட்டு மில்லேங்காணும், என்ன இருந்தாலும் செட்டியார் செட்டியார்தானே!

சுப் : அப்படின்னா அவருக்கு இதுவும் ஒரு பிசனசுன்னு சொல்லுங்கோ!

ரங் : வேறென்ன, அவருக்கு பப்ளிசிட்டி ஒரு பிசினசா இருக்கச்சே, இதெல்லாமா பெரிய காரியம்?

சுப் : சரி, அவர் எப்படியாவது ஒழிஞ்சு போகட்டும் நமக்கும் தமிழிசையாலேலாபமிருக்குன்னு சொல்லுங்கோ.

ரங் : அதிலென்ன சந்தேகம்; இதெல்லாம் தெரிஞ்சு தான் ஆரம்பத்திலேயே இந்த மூவ்மென்டை (Movement) நம்ம கிருஷ்ணமூர்த்தி ஐயர் கூட சப்போர்ட் பண்ணியே எழுதினார்.

சுப் : ஆமாம்... ஆமாம்; என்ன இருந்தாலும் அவர் திறமையே ஒரு அலாதி தினுசுங்காணும், பாருங்களேன்... ஆச்சாரியாரை...எவ்வளவு சப்போர்ட் பண்றார்! அவர் ப்யூச்சர் (Future) என்னடான்னு தெரிஞ்சு நடக்கறவர்.

ரங : ஆமாம், ஆமாம் ; அவர் இப்போ கொஞ்சநாளா சேஷலிஸ்டுகளைக் கூட சப்போர்ட் பண்ண ஆரம்பிச்சிருக்கார்.

சுப் : வேற வழி? நாம் கூட இனிமே சோஷலிஸ்டுன்னு சொல்லிக்க வேண்டியதுதான்.

ரங் : சரி, சரி, வாரும் உள்ளேபோய் உட்காருவோம் மற்ற விஷயங்களெல்லாம் அப்புறம் பேசிக்கலாம். ஒரு நாளைக்கு ஆத்துக்கு வாங்களேன், சாவகாசமா பேசலாம் பேச வேண்டிய விஷயம் ரொம்ப இருக்கு. ஆச்சாரியார் வேறே மெட்ராசுக்கு வந்துடப் போறார்—நியூ கான்ஸ்டிட்யூஷன் வரப்போறது. அதைப் பத்தியெல்லாம் பேசலாம்.

சுப் : ஆமாம், ஆமாம்,(இருவரும் கச்சேரி கேட்க ஆரம்பிக்கின்றனர். கச்சேரி முடிந்தவுடன், ரங்காச்சாரி தன் மனைவியை சந்தித்தபின் அவளை வரும் வீடு நோக்கிச் செல்கின்றனர்)

குடியரசின் முதல் தலைவர்

இந்தியக் குடியரசின் முதல் தலைவராக ஒருவரைத் தேர்ந்தெடுக்கும் காரியத்துக்காக, பிரதம மந்திரியும் உதவிப் பிரதம மந்திரியும் டிசம்பர் 24-ந் தேதியன்று அரசியலமைப்பு சபையைச் சேர்ந்த 38 உறுப்பினர்களுடன் கலந்து பேசினர். பல வேறு மாகாணங்கள், சமஸ்தானங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளாகவே மேற்கண்ட 38 பேரும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனராம். தோழர் சி. ராஜகோபாலாச்சாரியார், டாக்டர் ராஜேந்திர பிரசாத் ஆகிய இருவர் தம் பெயர்களே, மேற்படி கூட்டத்தாரிடையே பிரபலமாக அடிபட்டதாம். இவ்விருவர்களுடையவும் தொண்டையும் தக்க முறையில் நாடுபெற ஆவனசெய்ய வேண்டுமென்றும் பொதுவாகக் கருதப்பட்டதாம்.

பிரதம மந்திரி, உதவிப் பிரதம மந்திரி ஆகியோரிடமே முழுப் பொறுப்பையும் விட்டு விட்டனர் மேற்படி உறுப்பினர்களெனத் தெரிகிறது. இவர்கள் செய்யும் முடிவை, காங்கிரஸ் கட்சி ஏற்றுக் கொள்ளுமாம். ஜனவரி 24-ல் அரசியலமைப்பு சபை கூடி, தலைவரைத் தேர்ந்தெடுக்குமாம்.

25-ந் தேதி மாலை பட்டேல் விடுதியில் மேற்படி அரசியலமைப்பு சபை உறுப்பினர்கள் நேரு-பட்டேல் ஆகியோருடன் கலந்து பேச்சுவார்த்தை நடத்தியதைத் தொடர்ந்து, டாக்டர் ராஜேந்திரபிரசாத்தை தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப் பெறுவாரென்று பத்திரிகைகளில்வந்த செய்தி ஆதாரமற்றதென அறிவிக்கப்படுகிறது.

ஆப்பிரிக்க சுதேசிகளுக்கு கசையடி

ஜோஹென்னஸ்பர்க், டிச. 26—குற்றம் செய்யும் ஆப்பிரிக்க சுதேசிகளுக்குக் கசையடி அதிகமாகக் கொடுக்க வேண்டும் அப்படி செய்தால்தான், அவர்கள் குற்றத்தை உணருவார்கள் என்றும் டச்சு சீர்திருத்த 'சர்ச்' பத்திரிகை 'கேர்க் போ ' எழுதுகிறது.

இப்பொழுது சிறையில் அவர்கள் நடத்தப்படுவது, அவர்களுக்குக் கிடைக்கும் உணவு இவைகளால் சிறைகளில் அவர்கள் கூட்டம் அதிகரிக்கிறதே ஒழிய அவர்கள் ஒருநாளும் திருந்த மாட்டார்களென்று அப்பத்திரிகை கூறுகிறது.

அணுக் குண்டுபற்றி ராணுவ வல்லுநர்கள் கருத்து

லண்டன், டிச. 27—அணுக்குண்டு இனி போர்களில் உபயோகிக்கப்படமாட்டாதென்று, உயர்தர ராணுவ வல்லுநர்கள் கருதுகிறார்கள்.

பல காரணங்களைக் கொண்டு இவர் இந்த அபிப்பிராயத்தைக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. அவர்களில் ஒருவர் இதற்கான காரணங்களைக் கூறியதாவது :—

1. ஜனநாயக நாடுகளில் பொது மக்கள் கருத்து இதை எதிர்ப்பதாக இருப்பது.

2. எந்த இடம் அணுக் குண்டால் நாசமடைகிறதோ, அந்த இடத்தின் சீரமைப்புச் செலவு, வெற்றி பெற்ற நாட்டின் தலைமீது விழுவது.

இவைகளை உத்தேசித்தாவது, அணுக்குண்டு போர்களில் உபயோகிக்கப் படமாட்டாதெனக் கூறலாம் என்று சொல்லப்படுகிறது.

இசைத்தட்டுப் பிரியர்!

உலகிலேயே அதிகமாக இசைத்தட்டு 'ஸ்டாக்' வைத்திருப்பவர் மைசூர் மகாராஜாதான் என்று, இந்து தகவல் கிடைத்திருக்கிறது. எச். எம். வி. சங்கீத டைரக்டர் வால்டர் லெக்கியை மைசூருக்கு வரும்படி மகாராஜா அழைத்திருக்காராம். அவரும் மைசூருக்குப் புறப்பட்டுவிட்டார்.

சில காலத்திற்கு முன்பு பில்ஹார்மோனியா கான்ஸர்ட் சொஸைட்டியின் போஷகராக இருக்கும்படி மகாராஜாவை லெக்கி கேட்டுக் கொண்டிருந்தாராம். இவ்வாண்டு நிகழ்ச்சியும் மகாராஜாவுக்கு அனுப்பப்பட்டிருந்ததாம். அதில்மட்டும் சில மாறுதல்களைச் செய்து, மகாராஜா அனுப்பி வைத்திருப்பதாகத் தெரிகிறது. மகாராஜா பில்ஹார்மோனிகா சொஸைட்டியின் ஆர்கெஸ்ட்ராவை நேரில் கேட்டதில்லையாம். ஆனால் அந்த ஆர்கெஸ்ட்ரா சொஸைட்டியாரின் இசைத்தட்டுகளை அவர் அடிக்கடி பாடவைத்துக் கேட்பதுண்டாம்.

—குனேர்

மக்கள் தொகைபற்றிய பிரச்னை பரிசீலனை

மக்கள் தொகைபற்றியே பிரச்னைகளைப் பரிசீலனை செய்யும் இந்திய இன்ஸ்டிடியூட்டின் தேசிய நிர்வாக கவுன்சில் தலைவராக இருக்க முன்னாள் நிதிமந்திரி தோழர் ஆர். கே. சண்முகம் சம்மதித்துள்ளாராம். இந்த இன்ஸ்டிடியூட் அடுத்த வாண்டு அண்ணமலைப் பல்கலைக் கழகத்தில் துவக்கிவைக்கப்படும். பிரபல இந்தியப் பொருளாதார வல்லுநர்களாகிய டாக்டர் கியான் சாந்த், டாக்டர் பி. ஜே. தாமஸ், பேராசிரியர் சி. என். வக்கீல், தோழர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி, டாக்டர் டி. பாலகிருஷ்ணு, டாக்டர் ராதா கமால் முக்கர்ஜி ஆகியோர் இந்த கவுன்சிலில் இடம் பெறுகிறார்களாம்.

பாவ்டே பாரிஸுக்கு வருகை

பாரிஸ், டிச. 27—வியட்நாமுக்கு 'அதிகாரமாற்றம்' ஏற்பட்ட பின், பாவ்டே செய்யவிருக்கும் முதல் காரியம் பாரிசுக்கு வருவதாகத்தான் இருக்கும் என்று தெரிகிறது. சீன கம்யூனிஸ்டுகளின் வெற்றியினால் ஏற்பட்ட நிலைமை குறித்து, அவர் பிரெஞ்சு சர்க்காருடன், கலந்தாலோசிப்பார் என்று தெரிகிறது.

பாவ்டே திரும்பி வந்ததும், புனெட்ட் ஸ்டேட்ஸ் அரசாங்கப் பிரதிநிதி பிலிப் ஜேஸப்புடன் கலந்து பேசுவார்.

—ரூ

திருச்சி மாவட்ட தி.மு.கழக அமைப்புக் கூட்டம்

திருச்சி:— 25—12—49 ஞாயிறு காலை 10-மணிக்கு என். எஸ் பங்களாவில் தவுட்டுப்பாளையம் திரு. ம.பி. மூர்த்தி அவர்கள் தலைமையில் மாவட்ட நிர்வாக அமைப்புக் கூட்டம் நடைபெற்றது.

தீர்மானங்கள்

(1) கீழ்க்கண்ட கிளைக் கழகங்களிலிருந்து அங்கத்தினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை இக்கூட்டம் மாவட்ட அங்கத்தினர்களாக அங்கீகரிக்கின்றது.

பூவாளூர்:—பி. சேது, ராமலிங்கம்.

லால்குடி:—பி. வி. பாலசுப்ரமண்யம், தங்கராசன்.

புதுக்கோட்டை:— அரு. பெரியண்ணன், ஞானமுத்து.

தவுட்டுபாளையம்:—டி. பி. மூர்த்தி, பி. முத்து.

புகளூர்:— கே. கே. சாமி டி. பி. வடிவேல்.

கல்கண்டார்கோட்டை :— எல். கனிமுத்து, எம். மாணிக்கம்.

சோமரசம்பேட்டை :— டாக்டர் எ. ஜான், வி. எம். கணேசன்.

அம்பில்:—எ. பி. தர்மலிங்கம், எம். பி. செல்லையா.

அரியலூர்:— ஆர். ரெங்கநாதன், எ. ஜி. காதர்.

பம்பரம்சுத்தி:-எ. முர்வை, அருணப்பன்.

துறையூர்:—டி. பி. அழகமுத்து, கே. ஆர். கோம்பரம்.

ஆலமரத்துப்பட்டி:— எ. சின்னசாமி, அப்பாவு.

தாத்தையங்கார்பேட்டை :- முத்துகருப்பன், பி. ஆர். முத்து கிருஷ்ணன்.

ஆலங்குடி :— ஆப. ராமசாமி, பி. சு. நடராஜன்.

சிரங்கம், திருவானைக்காவல் } வி.சீனிவாசன், மருதைநாயகம்.

குளித்தலை:—மணி மூத்து சாமி, அர்த்தநாரி.

நாரணமங்கலம் :—செண்பகராசன், விஜயகோபாலன்.

ஜெயங்கொண்டம் :—வை. ராசகோபாலன், கே. எஸ். கடசி.

திருச்சிநகரம்:—என். சங்கரன், அ. மா. வானமாமலை.

உறையூர்:—எம்.என் மணி.

மலைக்கோட்டை :—டி. என். மாணிக்கம்.

பெரியகடை வீதி :—அருணகிரி.

மாசிங்பேட்டை :—கே. துரைசாமி.

2-வது தீர்மானம்

மாவட்டச் செயலாளராக என். சங்கரன் அவர்களை அம்பில் தர்மலிங்கம் முன்மொழிய, மார்சிங்பேட்டை துரைசாமி பின்மொழிய தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

3-வது தீர்மானம்

துணைச்செயலாளராக தவுட்டுபாளையம் ம. பி. மூர்த்தி அவர்களையும், ஜி. மாரகுசம் அவர்களையும் உறையூர் மாணிக்கம் முன்மொழிய, ... துரைசாமி, அர்த்தநாரி பின்மொழிய ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

4-வது தீர்மானம்

பொருள் உதவியினராக அம்பில் தர்மலிங்கம் அவர்களை ஜி. மாரகுசம் முன்மொழிய வி.எ. கணேசன் பின்மொழிய ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டது.

5-வது தீர்மானம்

விளம்பர உதவியினராக உறையூர் எம்.என். மணி அவர்களை அருணகிரி முன்மொழிய பி. முத்து பின்மொழிய ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

6-வது தீர்மானம்

இதுவரை மாவட்ட கழகத்திற்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்பாத கிளைக் கழகங்களிலிருந்து இனி தேர்ந்தெடுத்து அனுப்பப் படுவோர்களை அங்கத்தினர்களாக சேர்த்துக் கொள்ள, பொதுச் செயலாளருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. பிறகு சங்கரன் கழகவேலை பற்றி பேசியபின், தலைவர் முடிவுரைக்குப்பின், அமைப்பாளர் நன்றிகூற கூட்டம் 1-45-க்கு முடிவுற்றது. (வி. உ. என்.)

யுனைடெட் ஸ்டேட்ஸில் யூரேனியம் வேட்டை

லண்டன், டிச. 27—

ஆயிரக்கணக்கான அமெரிக்கர்கள் ஜீஜர் கருவிகளைக் கொண்டு யூரேனியம் எங்கெல்லாம் அகப்படுகிறது என்று தேடுவதில் ஈடுபட்டிருக்கின்றனர்.

அவர்கள் கண்டுபிடிக்கும் பொருள்களில் 20 சதவிகிதத்துக்கு மேல் யூரேனியம் இருந்தால், அவர்களுக்கு யுனைடெட் ஸ்டேட்ஸ் சர்க்கார் 3500 ஸ்டர்லிங்வரை ஒரு பரிசு அளிக்குமாம்.

அவர்கள் கண்டுபிடிக்கும் சுரங்களில் இன்னும் அதிகமாக யூரேனியம் அகப்பட்டால் பேரும் கொண்டு ராணம் அளிக்கப்படுமாம்.

இதுவரை 5000-க்கு மேற்பட்ட ஜீஜர் கருவிகள் விற்கப்பட்டிருக்கின்றன. ஏராளமான கண்டு பிடிக்கப்பட்ட உலோகப் பொருள்கள், சர்க்கார் ரசாயன பரிசோதனைசாலைக்கு தினமும் வந்த வண்ணமிருக்கிறதாம்.

இந்தியாவுக்கு ஆஸ்திரேலியா மாவு

பெர்த், டிச. 27—

ஆஸ்திரேலியாவிலுள்ள 4000 டன் கோதுமை மாவை விலையைக் குறைத்துத் தருவதாக இந்தியாவுக்கும், பிரிட்டனுக்கும் ஆஸ்திரேலியா கோதுமை போர்டு அறிவித்திருக்கிறது. யுனைடெட் ஸ்டேட்ஸுடனும், கனடாவுடனும் போட்டியிடுவதற்காகவே விலையை குறைக்க ஆஸ்திரேலியா முன்வந்திருப்பதாகத் தெரிகிறது.

ஒரு அதிகாரி இவ்விஷயமாக இன்று கூறுகையில் டாலர் பேரப்பகுதியால் ஆஸ்திரேலியாவின் கோதுமை மாவு வர்த்தகம் மிகவும் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், அதன் மூலம் 800,000 டன் மாவு உற்பத்தி செய்யப்படுகிறதென்றும் அதற்காகவே விலை குறைப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறதென்றும் இந்தியாவும் பிரிட்டனும் இதை ஏற்றால் ஆஸ்திரேலியாவுக்கு மிகவும் சௌகரியமாக இருக்குமென்றும் கூறினர்.

தி. மு. கழகக் கிளைகள்

சென்னை சேப்பாக்கம்— நகர உட் கிளை

சென்னை, டிச. 2'—

18—12—49 ஞாயிறு மாலை 3-மணிக்கு சேப்பாக்கம், அருணாசல ஆசாரித் தெரு, 13 எண்ணுள்ள இல்லத்தில் தி. மு. க. அமைப்புக் கூட்டம் நடைபெற்றது. தோழர் கா. அப்பாதுரை எம். ஏ., எல். டி. அவர்கள் கூட்டத்திற்குத் தலைமைவகித்தார்கள். அதுபோது "திராவிட முன்னேற்றக் கழகம்—சென்னை நகர சேப்பாக்கம் உட்கிளை" நிறுவப்பட்டு, கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர் :— எஸ். எல். ராமு; துணைச் செயலாளர்:—கோ. சம்பந்தம்; பொருள் உதவியினர்:—எம். சுப்பையா; விளம்பர உதவியினர்கள் :—பி. எஸ். தருமவேலு; கணேசன்.

ஏனைய செயற்குழுவினர் :—கா. அப்பாதுரை எம். ஏ., எல். டி., கே. ராமசாமி, ஜி. வாசுதேவன், எ. லோகநாதன், பா. குட்டியப்பன், என். கோதண்டபாணி, எ. சண்முகம், டி. என். துரைக்கண்ணு, வி. கோவிந்தன், பி. ஆர். கிருஷ்ணன்.

பின்பு, கழகத்தின் தற்கால நடைமுறை விதிகள் படிக்கப்பட்டு, எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டன.

சென்னை மாவட்டக்கழகத்திற்கு பிரதிநிதிகளாகத் தோழர்கள் கா. அப்பாதுரை, பி. எஸ். தருமவேலு ஆகிய இருவரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கழகத் துவக்க விழாவை 1—1—50ல் நடத்துவதென முடிவுசெய்யப்பட்டது. இறுதியாக கழகத்தின் நடைமுறை தற்காலிக சந்தா விவரங்கள் அறிவிக்கப்பட்டு, அமைப்பாளர் நன்றி கூற, கூட்டம் முடிவுற்றது.

* * *

அம்மையப்பட்டு —சிற்றூர்க் கிளை

அம்மையப்பட்டு, டிச. 20—

இவ்வூர் திராவிடர் கழக அங்கத்தினர்களின் கூட்டம், தோழர் ஏ. அ. வடிவேலு தலைமையில் 18—12—49ல் கூடியது. அதுபோது, இவ்வூர் திராவிடர் கழகம் "திராவிட முன்னேற்றக் கழகம்—அம்மையப்பட்டு சிற்றூர்க் கிளை" என மாற்றியமைக்கப்பட்டது. பின் கீழ்கண்ட புதிய செயற்குழுவொன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—ஏ. கே. எம். பூபாலனர்; துணைச் செயலாளர்:—வி. எம். சின்னசாமி; நிதி உதவியினர்:—டி. நமச்சிவாயம்; விளம்பர உதவியினர்:—கே. ஏ. வடிவேலு; ஏனைய செயலுறுப்பினர்கள்:-கனி, பி. மதுரமுத்து, எஸ். சம்பந்தம், கோவிந்தராசன், எஸ். சுந்தரம், மா. ஆறுமுகம்.

வட ஆற்காடு மாவட்டக் கழகத்திற்குப் பிரதிநிதிகளாகத் தோழர்கள் கே. ஏ. வடிவேலு, ஏ. கே. எம். பூபாலனர் ஆகிய இருவரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இக்கூட்டத்திற்கு வந்தவாசி தி. மு. க. துணைச் செயலாளர் தோழர் வி. டி. அண்ணாமலை, செயலாளர் தோழர் க. தங்கவேலு இருவரும் வந்திருந்து சிறப்பித்தார்கள். (வி-உ)

* * *

பழநகர்— நகரஉட்கிளை

பழனி, டிச. 22—

இவ்வூர் ஆதிதிராவிடர் தெருவில் 21—12—49 அன்று, 'திராவிட முன்னேற்றக் கழகம், பழநகர் உட்கிளை' நிறுவப்பட்டு, கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர் :—வலங்கைப்பன்; துணைச் செயலாளர்:—முருகன்; பொருள் உதவியினர்—வெள்ளைக்கண்ணு, மற்றும் நான்கு செயற்குழுவினரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

வரகூர்—சிற்றூர்க்கிளை

வரகூர், டிச. 23—

நாமக்கல் தாலுகா, வரகூரில் திராவிட இயக்க அன்பர்களின் முயற்சியால் 17—11—79ல் "திராவிட முன்னேற்றக் கழகம் வரகூர் சிற்றூர்க்கிளை" நிறுவப்பட்டது. பின் கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்—சி. சுந்தரராசன்; துணைச் செயலாளர்-நா. பிரணவம்; நிதி உதவியினர்—அ. ராமநாதன், விளம்பர உதவியினர்—ரா. ஜெயராஜ். (செ-ர்)

* * *

சொக்கநாதபுரம்— சிற்றூர்க்கிளை

சொக்கநாதபுரம், டிச. 24—

இராமநாதபுரம் மாவட்டம், சொக்கநாதபுரம் தி. மு. க. அமைப்புக் கூட்டம், 23—12—49ல் தோழர் சுப. அன்பழகன் தலைமையில் நடைபெற்றது. அதுபோது பல தோழர்கள் பேசினர். பிறகு "திராவிட முன்னேற்றக் கழகம்—சொக்கநாதபுரம் சிற்றூர்க்கிளை" நிறுவப்பட்டு, கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்—சுப. அன்பழகன், பொருள் உதவியினர்:—வ. அழகப்பன், விளம்பர உதவியினர்:—கரு. சேதுராமன்மற்றும்எட்டுபேர்அடங்கிய செயற்குழுவொன்றும் தேர்ந்தெடுக்கப் பட்டது. பின்பு, தோழர் வ. அழகப்பன் நன்றிகூற, கூட்டம் முடிவுற்றது. (செ-ர்)

* * *

துத்தாரிபாளையம்—சிற்றூர்க்கிளை

துத்தாரிபாளையம், டிச 24—

இவ்வூர் தி. மு. க. அமைப்புக் கூட்டம், 23—12—49-ல் தோழர் ராஜுசாமி அவர்கள் இல்லத்தில், புத்தாசல் தோழர் ப. நல்லசாமி தலைமையில் நடைபெற்றது. அதுபோது, "திராவிட முன்னேற்றக் கழகம்—துத்தாரிபாளையம் சிற்றூர்க்கிளை" நிறுவப்பட்டு, கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்—கே. வி. சாமி; பொருள் உதவியினர்:—கே. ராஜுசாமி; விளம்பர உதவியினர்:—ஜி. மௌனகுருசாமி. மற்றச் செயலுறுப்பினர்கள்:—ரங்கசாமி; திருமலைசாமி.

பின்பு, தோழர்கள் கே. வி. சாமி, மௌனகுருசாமி ஆகியோர் கழக வளர்ச்சி குறித்துச் சொற்பொழிவாற்றினர். பின்பு நன்றி கூறலுடன் கூட்டம் முடிவுற்றது.

* * *

ரயிலடி அம்மாபேட்டை — சிற்றூர்க் கிளை

(ரயிலடி) அம்மாபேட்டை, டிச. 25

இவ்வூர் திராவிட முன்னேற்றக் கழக ஆதரவாளர்கள் 23.12.49-ல் கூடி, "திராவிட முன்னேற்றக் கழகம்—ரயிலடி அம்மாபேட்டை சிற்றூர்க்கிளை" நிறுவினர். அதுபோது கீழ்க்கண்ட செயற்குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்—எஸ். எம். பக்கிரிசாமி; துணைச்செயலாளர்—ஏ. கே. கோவிந்தராசன், நிதி உதவியினர் எஸ். ஏ. சுல்தான்முகம்மது, விளம்பர உதவியினர்—எஸ். டி. சாமி ஏனைய செயற் குழுவினர்-வி. சம்பந்தம், என்.கே. பிச்சை, கே.எஸ் அப்துல்சத்தார், எஸ். என். அப்துல்கபூர், ஈ. அப்துல் அஜீஸ், கே. கதிர்வேலு, சி. எஸ். வாசு, ஆர். சம்பந்தம், பி. அப்துல் ரஹிமான், எஸ். இ. எம். அப்துல்ஹமீது.

* * *

பெரம்பலூர்—நகரக்கிளை

பெரம்பலூர், டிச. 25—

இவ்வூர் தி. மு. க. தோழர்கள் 21-12-49-ல் தோழர் கே. எம். முத்து சித்தண்டி நிலையத்தில் கூடி, "திராவிட முன்னேற்றக் கழகம்—பெரம்பலூர் நகரக்கிளை" நிறுவினர். பின்பு கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—கே. எம் முத்து; துணைச் செயலாளர்:—எஸ் ஆர். மொயதீன்; பொருள் உதவியினர்:- மு. ராமலிங்கம்; விளம்பர உதவியினர்:— சுந்தரராசு, ஏனைய செயலுறுப்பினர்கள்:—என். துரைசாமி, சைவத் அலி, ஜி. அப்துல் அஜிஸ், எஸ். தஸ்தகீர், இராமச்சந்திரன். மேற்கொண்டு சிலரை செயற்குழுவில் சேர்த்துக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது. திருச்சி மாவட்டச் சுற்றுப்பிரயாணத்திற்கு வரும் பொதுச் செயலாளர் வரும் பொழுது இவ்வூரிலும் சிறைத்த கழகத்துவக்க விழா நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

* * *

ஆம்பூர், கஸ்பா – நகர உட் கிளை

ஆம்பூர், டிச. 26—

25-12-49ல் தோழர் வி. இராமலிங்கம் தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில் 'திராவிட முன்னேற்றக் கழகம்—ஆம்பூர் நகர—கஸ்பா உட்கிளை" நிறுவப்பட்டு, கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. செயலாளர் வி. பி. நடராசன், துணைச் செயலாளர்—டி. சண்முகம், நிதி உதவியினர்—எஸ். ஜெயவேல், விளம்பர உதவியினர்-ஆர். சுப்பிரமணியம். ஏனையசெயற்குழுவினர்—வி. அப்பாசாமி, எம். ஏ. மணி, எம்.எம். தமிழரசு, டீ. செல்வன், எம். மாசிலாமணி, எஸ். ஜே. பத்மநாபன். பின்பு தோழர் வி. கே. அழகரசு அவர்களால் கஸ்பா பெரியார் மைதானத்தில் தி. மு. க. கொடி ஏற்றுவிக்கப்பட்டு, இனிப்பு வழங்கப்பட்டது. பின்பு நன்றி கூறலுடன் கூட்டம் முடிவுற்றது.

கடற் பகுதிகளில் விமானங்கள் இறங்க..

லண்டன், டிச. 27—

சமுத்திரங்களில் விமானங்கள் இறங்குவதற்கு வசதியாக மிதக்கும் தளங்கள் அமைப்பது சாத்தியம் என்று கருதப்பட்டு, இதற்கான திட்டம் வகுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் நிறைவேறினால் பெரும் கடல்களால் பிரிக்கப்பட்டுள்ள நிலப்பரப்புகள் இம்மாதிரி திட்டு சங்கிலிகளால் இணைக்கப்படுமாம்.

இம்மாதிரி மாடல்கள் பிரிட்டனிலும், அமெரிக்காவிலும் செய்து பரீட்சிக்கப்பட்டு, இவை சாத்தியம் தான் என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. சமுத்திர அலைகளாலும், புயல்களாலும் இவைகளை அசைக்க முடியாதாம்.

இத்திட்டுகளில் விமானங்கள் தாராளமாக வந்திறங்க முடியுமாம். எவ்வளவுதான் தூரமாக இருந்தாலும் இறங்கி இறங்கிச் செல்லக்கூடிய வசதியிருப்பதால் சிறு விமானங்களே நீண்டதூர பிரயாணங்களை இதனால் மேற்கொள்ள முடியும். பெட்ரோலும் ஏகமாக 'ஸ்டாக்' செய்துகொள்ளவேண்டிய அவசியமிருக்காது. கால நிலை அறிவிக்கும் ஸ்தலங்களாகவும் இவை விளங்க முடியும். இந்த மாதிரி திட்டுகளை எல்லா தேசங்களும் பொதுவாக உபயோகிக்கும்படியிருக்கவேண்டும் என்று இத்திட்டத்தை வகுப்பவர்கள் கூறுகிறார்கள்.

நடன விழா

திருப்பூர், டிச. 13—

திருப்பூர் ஜெயலக்ஷ்மி தியேட்டரில் 11—12—49-ல் திருச்சி அம்சா நடனக் குழுவினரால் நடைபெற்ற நடன விழாவில் தோழர் எஸ். ஆர். சுப்பிரமணியம் அவர்கள் தலைமைவகித்தார்கள். நடனக் கலையை நாட்டு மக்களுக்குப் பயன்படும் வகையில், பகுத்தறிவுக்கேற்ற முறையில் கொண்டுவர வேண்டும் என்று, இறுதியாகப் பேசும்போது குறிப்பிட்டார். (ஒ-சி)

ஓராண்டில் பிரிட்டனின் ஒப்பற்ற சாதனைகள்

கைத்தொழில்கள் முன்னேற்றம் பற்றி சர். ராபர்ட்ஸின் கிளேயர்

1948—49-ம் ஆண்டில் பிரிட்டிஷ் கைத்தொழில்களின் முன்னேற்றத்தைத் தெளிவுபட சித்தரிக்கிறார் சர். ராபர்ட்ஸின் கிளேயர் (பிரிட்டிஷ் கைத்தொழில் சம்மேளனத் தலைவர்) இக்கட்டுரையில். இக்கை சதந்திரவில் வெளியாகியிருக்கும் இக்கட்டுரை வாசகர்களனைவருடையவும் கவனத்தையும் கருத்தையும் ஈர்க்கக் கூடியதாகும்.

ஒரு நாட்டின் கைத்தொழில்கள் ஒரு குறிப்பிட்ட வருடத்தில் எவ்வாறு முன்னேறியுள்ளன என்பதைத் துல்லியமாக "அளப்பதற்கு" பல சாதனங்கள் இருக்கின்றன. என்றாலும் பொதுவாக ஆராய்ச்சி, தொழில் நுணுக்க முன்னேற்றங்கள் புதிய தொழிற்சாலைகள், முக்கியமாக ஏற்றுமதிகளின் அளவு ஆகியவைகளைக் கொண்டுதான் அது தீர்மானிக்கப்படுகிறது. இசன்படி கவனித்தால், பிரிட்டிஷ் கைத்தொழில்கள் இவ்வருடம் முன்னேற்றம் அடைந்துள்ளன.

உதாரணமாக, இவ்வருடம் இரு மாபெரும் தொழிற்சாலைகள் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இரண்டாயிரம் ஏக்கரா நிலப்பரப்பில் சுமார் 30 கோடி ரூபாய் செலவில் ரசாயனத்தொழில் அபிவிருத்தித் திட்டத்தின் பாகமாக நிர்மாணிக்கப்பட்டுள்ள தொழிற்சாலை இவைகளில் ஒன்று. மற்றொரு தொழிற்சாலை பெட்ரோலியத்திலிருந்து ரசாயனப் பொருள்கள் உற்பத்தி செய்வதற்காக அமைக்கப்பட்டுள்ளது.

புதிய இயந்திரங்கள், புதிய முறைகள், புதிய பொருள்கள் முதலிய துறைகளிலும் பிரிட்டிஷ் கைத்தொழில்கள் முன்னேறியுள்ளன. உதாரணமாக பிரிட்டிஷ் பஞ்சுத் தொழிலின் ஆராய்ச்சி ஸ்தாபனம் கண்டுபிடித்துள்ள "ஆடோமாடிக் டாபர்" என்ற இயந்திரம் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். நூற்கும் ஆலைகளில் ஆயிரக்கணக்கான பாபின்களை கையால் மாற்ற இருந்துவரும் தொல்லையை இப்புதிய இயந்திரம் தவிர்க்கிறது. புதுவித செயற்கை நார் ஒன்றும் பிரிட்டனில் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.

கடந்த சில வருடங்களாக பிரிட்டனில் நடைபெற்று வரும் ஆராய்ச்சிகளின் பலனாக, மனித சமுதாயத்தின் ஆரோக்கியத்தையும், உலக உணவு சப்ளையையும் பாதுகாப்பதற்கான பலவேறு மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. உதாரணமாக பொறுக்கமுடியாத வலியை உடனடியாக நிறுத்தக் கூடிய மருந்தொன்றும் ஆப்பிரிக்காவில் ஆயிரக்கணக்கான மனிதர்களையும் கால் நடைகளையும் பலிவாங்கிவந்த மாணை ஈக்களை ஒழிக்கக்கூடிய மருந்தொன்றும் இவ்வருடம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இயற்கை வாணங்களில் டெலிவிஷன் கண்காட்சி "ஒத்"தைக் கண்டுபிடித்துக் காட்டும் ராடார் கருவி உலோகங்கள் அறுப்பதிப்பதைத் தடுப்பதற்கான புதுமுறை ஆகியவையும் இவ்வருடத்திய பிரிட்டிஷ் கண்டுபிடிப்புகளேயாகும்.

மின்சாரம் உற்பத்தி செய்யவோ அல்லது கப்பல் ரயில்வே எஞ்ஜின்களை ஓட்டுவதற்கோ உபயோகிக்கக் கூடிய புதுவித காஸ்டர்பைன் யந்திரமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதானது பிரிட்டன் நடத்திவரும் ஆராய்ச்சிகளின் வெற்றியை நன்கு பிரதிபலிக்கிறது.

அடுத்தபடியாக பிரிட்டனின் முக்கிய தொழிலான உருக்குத் தொழில் தன் பல வருஷ உற்பத்தி "ரெக்கார்டு"களையும் தகர்த்தெறிந்து வருகிறது. பிரிட்டனின் தற்போதைய உருக்கு உற்பத்தி யுத்தகால உற்பத்தி சராசரியை விட இரண்டு மடங்காகும். பிரிட்டனின் நிலக்கரி உற்பத்திப் பிரச்னை இன்னமும் பூரணமாக தீர்க்கப்படவில்லையென்றாலும் இவ்வருட உற்பத்தி கடந்த வருஷத்தைக் காட்டிலும் அபிவிருத்தியே அடைந்துள்ளது. இவ்வருட மூன்றாம் கால் பகுதியில் பிரிட்டன் ஏற்றுமதி செய்த 3,571,000 டன் நிலக்கரி 1940 வருடத்திற்குப் பின் மிக அதிகமானதாகும்.

மொத்தத்தில் இவ்வருட முதல் எட்டு மாதங்களில் பிரிட்டிஷ் கைத்தொழிலின் உற்பத்தி அளவு 1948 வரு இதே மாதங்களிலிருந்ததைவிட ஆறு அல்லது ஏழு சத விகிதம் அதிகமானதாகும்.

பிரிட்டனின் இவ்வருட கைத்தொழில் முன்னேற்றங்களை பரிபூரணமாக அறிய இன்னும் வேறு சில அம்சங்களையும் கவனித்தல் வேண்டும். உதாரணமாக கடந்த செப்டம்பர் மாதம் பிரிட்டிஷ் விமான உற்பத்தியாளர்கள் கழகம் நடத்திய விமான பொருட்காட்சி இத்துறையில் பிரிட்டன் வகிக்கும் தலைமையை நன்கு தெளிவாக்கியது. உலகிலேயே மிகப் பெரிய பிரயாண விமானமான பிரஸ்டல் பிரபஸான என்ற விமானக்கப்பலும் நான்கு நிமிடத்தில் 40000 அடி உயரம் செல்லக் கூடிய ஜெட்-வேட்டை விமானங்களும் இக்காட்சியில் பொது மக்களுக்குக் காட்டப்பட்டன. பிரிட்டனின் இவ்வருட விமான ஏற்றுமதிகளின் மதிப்பு கடந்த வருடத்தைவிட அதிகமானதாகும்.

பிரிட்டிஷ் கைத்தொழில்கள் ஏற்றுமதித் துறையிலும் கடந்த வருடம் பலபுதிய ரெக்கார்டுகளை ஏற்படுத்தியுள்ளன. உதாரணமாக மோட்டார் ஏற்றுமதிகளில் உலகிலேயே பிரிட்டன்தான் முதல் ஸ்தானம் வகித்தது. இவ்வருட செப்டம்பர் மாதத்தில் பிரிட்டன் வாரம் சராசரி 8700 விதம் மோட்டார் கார் உற்பத்தி செய்துள்ளது. மோட்டார் சைகிள், சைகிள் ஏற்றுமதிகளில் கூட பிரிட்டன்தான் உலகிலேயே மிகப் பெரிய ஏற்றுமதி நாடாக இருந்துள்ளது. பிரிட்டனில் தயாரிக்கப்படும் சைகிள் வருடமொன்றுக்கு 20 லக்ஷம் விதம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. பிரிட்டன் ஏற்றுமதி செய்யும் மின்சார சாதனங்களின் மாத சராசரி மதிப்பு சுமார் 466 கோடி ரூபாயாகும். இது 1938 வருடத்தைவிட மிக அதிகமானதாகும்.

இவ்வருட மூன்றாம் கால் பகுதியில் பிரிட்டன் ஏற்றுமதி செய்த இதர இயந்திர சாதனங்களின் மொத்த மதிப்பு 9067 கோடி ரூபாயாகும். இவைகளின் அளவு யுத்த முற்கால அளவைவிட இரண்டு மடங்கு அதிகமாகும். அடுத்தபடியாக பிரிட்டனின் கப்பல் கட்டும் தொழிலைக் கவனித்தால் இவ்வருட மத்தியில் உலக முழுவதிலும் கட்டப்பட்ட கப்பல்களில் 49 சதவிகிதம் பிரிட்டனிலேயே கட்டப்பட்டுள்ளன என்பது விளங்கும்.

ஆகவே மேற்கூறியவைகளிலிருந்து பிரிட்டனின் கைத்தொழில்கள் இவ்வருடம் அடைந்துள்ள முன்னேற்றத்தை ஒருவாறு தெரிந்து கொள்ளலாம்.

இனி நடப்பவை

மாயவரம்:— இவ்வூர் தி. மு. க. கிளையின் செயற்குழுக் கூட்டம், 31—12—49 சனி மாலை 7 மணிக்கு கழகக் கட்டிடத்தில் நடைபெறும். தோழர் ஆர். பழனிச்சாமி அவர்கள் தலைமை வகிப்பார்கள் அதுபோது பல முக்கியமான விஷயங்கள் ஆலோசிக்கப்பட இருப்பதால் செயற் குழுவினரனைவரும் தவறாது வருமாறு கோரப்படுகிறார்கள்.

* * *

திருப்பூர்:— இவ்வூர் தி. மு. க. கிளையின் செயற்குழுக் கூட்டம் 1-1-50 மாலை 6 மணிக்கு கழகக் கட்டிடத்தில் தோழர் சு. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும். அதுபோது முக்கியமான பிரச்னைகள் ஆலோசிக்கப்பட இருப்பதால் செயற்குழுவினரனைவரும் தவறாது வருமாறு அழைக்கப்படுகிறார்கள்.

* * *

சென்னை— கல்லூரி ஆசிரியர்கள் கழகத்தின் 4-வது மாநாடு, தாம்பரத்திலுள்ள சென்னை கிறிஸ்தவக் கல்லூரி, ஆண்டர்சன் ஹாலில் டிச 29, 30 ஆகிய தேதிகளில் நடைபெறும். டாக்டர் ஏ. ஜே. பாய்டு எம். ஏ. டி. டி. மாநாட்டைத் துவக்கிவைப்பார். டாக்டர் ஆர். வைத்தியநாதசாமி எம். ஏ. பி. எச். டி. தலைமை வகிப்பார்.

போகிற போக்கில்...!

"கடவுள் குறுக்கிட்டாலன்றி ஆந்திர மாகாணத்தை ஜன 26-க்குள் அடைந்துவிடுவோம்!"

—காளா வெங்கட்ராவ்

இதற்கெல்லாம் கடவுளுக்கு நேரமேது? உணவு நெருக்கடி ஒரு பக்கம், பண வீக்கம் இன்னொரு பக்கம். காஷ்மீர் பிரச்னை மற்றொரு பக்கம், அஸ்ஸாம் எல்லைக் கோட்டில் சீனக் கம்யூனிஸ்டுகள் திரளும் பிரச்னை நாலாவது பக்கம், இன்னும் அகதிகள் பிரச்னை, குடியரசுத் தலைவர் தேர்தல் பிரச்னை காமன்வெல்த் மாநாடு மற்ற மற்றவை கடவுள் உயிரை வாங்கிக்கொண்டிருக்கும்போது, ஆந்திர மாகாண விஷயத்தில்வந்தா குறுக்கிட்டுவிடப் போகிறார்? பாகிஸ்தான் பிரிவினையிலேயே குறுக்கிடாத கடவுளுக்கு ஆந்திர பிரிவினையில் குறுக்கிட என்ன 'ரைட்' இருக்கிறதென்று கேட்டுவிட மாட்டோமா, அப்படி அவர் வழிதவறி இங்கு வந்து குறுக்கிட்டு விட்டால்!

* * *

'நேரு சர்க்காரின் வெளி நாட்டுக் கொள்கைக்கு விநோபாபவே பாராட்டு'

—செய்தித் தலைப்பு

உள் நாட்டுக் கொள்கை மீது கொஞ்சம் எரிச்சல்தான் போலும்!

* * *

'தஞ்சை மேல வீதி மூலை அனுமார் கோவில் பிரசாதத்தைச் சாப்பிட்ட 35 பேருக்கு வாந்தியும் பேதியும் ஏற்பட்டு ஒரு சிறுமி இறந்தும் விட்டதாகத் தெரிகிறது'

—செய்தி

பூஜை—நைவேத்தியங்களை ஏற்றுக்கொண்ட உயர் திரு அனுமார் அவர்களின் உடல் நிலையில் ஏதாவது பாதிப்பு உண்டோ வென கலங்கிய உள்ளத்துடன் விம்மிக்கொண்டு கேட்கிறார், ஒரு கொண்டாடிப் பொடியாழ்வார்.

"தேசத்தின் முன்னேற்றம் என்ஜினீயர்கள் கையிலிருக்கிறது"

—செய்தி

நல்ல வேளை! நடு அங்குச் சட்ட மொன்று பிரகடனஞ் செய்து ஒருவர்விடாமல் எல்லா என்ஜினீயர்களையும் இழுத்து வந்து பாதுகாப்பான ஓரிடத்தில் நிறுத்தி, அவ்வளவு பேர் கைகளிலிருந்தும் 'தட்டிப்பிடுங்கி'க்கொண்டால் போகிறது முன்னேற்றத்தை! என்ஜினீயரிங் மாணவர்களையும் விடக் கூடாது. முன்னேற்றத்தை அவர்கள் கைகளில் வைத்திருக்க மாட்டார்கள்—சட்டைப் பைகளிலும், மணி—பர்ஸ்களிலும், பொடி டப்பிகளிலுமே வைத்திருப்பார்கள்! சர்வ ஜாக்கிரதையாகப்பழகி, கபக் என்று பறித்துக்கொள்ள வேண்டும்.

• • *

'மழையின்றி மக்கள் படும் அவதியை அறிந்து திருவாவடுதுறை ஆதீனத்தின் கட்டளைப்படி வாசுதேவநல்லூர் ஆலயத்தில் 17-12-49 முதல் வருணஜபம் நடைபெற்று வருகிறது.'

—செய்தி

திருவாவடுதுறை ஆதீனத்துக்குள்ள பொறுப்புணர்ச்சி கூட வருணபகவானுக்கு இல்லாமற் போனது வருந்தத்தக்கது! போகட்டும்! வருணஜபத்துக்குப் பின்னராவது, அந்த பகவான் எங்கு என்ன வேலையில் ஈடுபட்டிருந்தாலும் அதை ஒதுக்கிப்போட்டுவிட்டு, இங்கு விஜயம் செய்வாரென எதிர் பார்க்கப் படுகிறது! மேலும் பாராமுகமாய் இருப்பாரேல், அவர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப் படுவதோடு, வருணஜெபத்துக்குப் பிடித்த செலவுக்கு நஷ்டஈடும் கோரப்படுமென்று பெரிதும் நம்பப் படுகிறது!

"இங்கு காலெடுத்து வைக்காதே!"

கொழும்பு, டிச 27—

முன்பு கொழும்பில் இருந்தவரும், இப்பொழுது கொழும்புவுக்கு லண்டன் சென்றுவிட்டு திரும்பி ராஞ்சி கப்பலில் வந்திறங்கியவருமான ஈவான் உட்செர்கோ என்ற ருமேனியர் இலங்கையில் புது குடியேற்ற சட்டப்படி இறங்க அனுமதிக்கப்படவில்லை.

'என்னை கொழும்புவுக்கே அனுப்பியிருக்கின்றார்கள். ஆனால் இங்கே என்னை இறங்கவிட மறுக்கிறார்கள். நான் கொண்டுள்ள அரசியல் அபிப்பிராயங்கள் காரணமாக நான் ருமேனியாவுக்கு திரும்பிப் போகமுடியாது எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை, என்று அவர் கூறினார்.

அக்கப்பல் ஆஸ்திரேலியாவுக்கும் புறப்பட்டுவிட்டது. அங்கும் இறங்க அவர் அனுமதி மறுக்கப்படலாம்.

தெ. இ. ர. மின்சார வண்டிகள்

1948-49 ஆண்டு வருமானம்

சென்னை, டிச. 26—

சுமார் 27,000,000 பிரயாணிகள் 1948-49-ம் வருடத்தில் தென்னிந்திய மின்சார ரயிலை உபயோகித்திருக்கின்றனர் என்றும் சராசரி ஒரு நாளைக்கு 75,000 பேர் பிரயாணம் செய்திருக்கின்றனர் என்றும் கூறப்படுகிறது. இவ்வருடத்திற்கு ரூ 34,000,00 வருமானமும், சராசரி ஒரு நாளைக்கு ரூ. 9,000 கிடைத்ததாகவும் கூறப்படுகிறது. இதில் மூன்றாம் வகுப்பினரே அதிகமாகச் சென்றதாகவும் மேற்படி வருடத்தில் 26,000,000 பிரயாணிகள் என்றும் தெரியவருகிறது. பீச்சில் இருந்து தாம்பரத்திற்கும், தாம்பரத்திலிருந்தும் பீச்சுக்கும் சுமார் 67,000 வண்டிகள் சென்றதாகவும், சராசரி ஒரு நாளைக்கு 184 வண்டிகள் என்றும் கூறப்படுகிறது.

திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்கள்

29—12—49

ஆவுடையானூர்:— இரா. சு. தங்கப்பழம், எம். எஸ். சிவசாமி

30—12—49

உறையூர்:— சி. பி. சிற்றரசு, டி. கே. சீனிவாசன்.

31—12—49

பழூர்:— சி. பி. சிற்றரசு.

திருச்சி மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக மாநாடு

1-1-1950 ஞாயிறு காலை 8-மணிக்கு

ஆசிரியர் வேலாயுதம் பந்தலில்
(திருச்சி முருகன் டாக்கீசுக்கு அருகில்)
நடைபெறும்

தலைவர் :
தோழர் ஈ. வே. அ. வள்ளிமுத்து அவர்கள்
(நகரசபைத் தலைவர், கோவில்பட்டி)

துவக்கிவைப்பவர் :
தோழர் P. பழனிச்சாமி அவர்கள்
(பெத்தாம்பாளையம்)

தோழர்கள் :

C. N. அண்ணாத்துரை M. A.	E. V. K. சம்பத்
இரா நெடுஞ்செழியன் M. A.	K. V. K. சாமி
க. அன்பழகன் M. A.	K. K. நீலமேகம்
இரெ. இளம்வழுதி M. A.	M. S. இராமசாமி
பூ. கணேசன் M. A.	A. V. P. ஆசைத்தம்பி
மா. இளஞ்செழியன் B.A.(HONS)	S. முத்து
K. A. மதியழகன் B. A.	இரா. சு. தங்கப்பழம்
N. V. நடராசன்	மு. கருணாநிதி
A. சித்தையன்	T. K. சீனிவாசன்
C. P. சிற்றரசு	M. S. சிவசாமி
S. K. சாமி	N. S. இளங்கோ
காஞ்சி. மணிமொழியார்	காஞ்சி. கல்யாணசுந்தரம்

தோழியர் மூவலூர் இராமாமிர்தத்தம்மையார்,
சென்னை சத்தியவாணிமுத்து
மற்றும் மாநில பொதுக்குழு உறுப்பினர்களும் கலந்துகொள்வார்கள்

இரவு 9-30 மணிக்கு
தோழர்கள் :
C. N. அண்ணாத்துரை, K. R. இராமசாமி
மற்றும் பல தோழர்கள் நடிக்கும்

— "சந்திரமோகன்" —

நாடகம் நடைபெறும்

மாநாட்டுக் கட்டணம் :— வரவேற்பாளர் ரூ. 5—0—0.
பிரதிநிதி ரூ. 1—0—0. ரூ. 2—0—0 (உணவு உட்பட)
பார்வையாளர் ரூ. 0—8—0

வரவேற்புக் குழுவினர்.

மேட்டூர்த் தேக்கத்தில் நீர்மட்டம் இறக்கம்

வடகிழக்குப் பருவ மழை பொய்த்து விட்ட காரணத்தால், மேட்டூர் நீர்த்தேக்கத்தில் நீர்மட்டம் இறங்கிவிட்டதை யனுசரித்து, நிலைமையைச்சமாளிப்பதற்கானவழி வகைகள் மேற்கொள்ள தஞ்சை வட்ட காவிரிடிவிஷன் சூப்பரின்டெண்டிங் எஞ்சினியர் டிச. 20-ல் பெரும் மிராசுதாரர்களின் மாநாடொன்றைக் கூட்டினார், நீர்மட்டம் குறைந்துவிட்டதால், இப்பருவமுழுதும் சமாளிக்கக் கிடைக்கும் 'சப்ளை'யைக்கொண்டு சரி செய்து கொள்ள வேண்டிய அவசியத்தை எஞ்சினியர் வற்புறுத்தினார் தண்ணீர்சப்ளையைக் குறைப்பதானால் ஜனவரி 15-க்குப் பின்னரே செய்ய வேண்டுமென்றும், இப்போது செய்தால், எற்கெனவே மழையில்லாக் காரணத்தால் சோர்வுற்றுக் கிடக்கும் பயிர்கள் மேலும் வாடி வதங்கிவிடுமெனவும் மிராசுதாரர்கள் அபிப்பிராயம் தெரிவித்தனர். தக்கமுறையில் ஆவனசெய்வதாக எஞ்சினியர் உறுதியளித்தார்.

இலங்கை மாணவருக்கு பிரிட்டன் உதவிச் சம்பளம்

கொழும்பு, டிச. 27—

நூற்றாண்டிற்கு முன்பு பிரிட்டனில் நடைபெற்ற ஒரு பொருட்காட்சியில் எற்பட்ட லாபத்தின் விளைவாக, இலங்கை பலனடைகிறது.

1851ல் விக்டோரியா மகாராணியின் கணவர் ஆல்பர்ட் இளவரசர் ஒரு பொருட்காட்சியை நடத்தினார். அதில் கிடைத்த லாபத்தைக்கொண்டு இராஜ்ஜிய விஞ்ஞான மாணவர் ஒருவருக்கு உபகார சம்பளம் கொடுக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது இதன்படி இலங்கை மாணவர் ஒருவருக்கு உபகாரச் சம்பளம் கிடைக்கும் —ஞேர்ஸ்

பிண்ணாக்கு ஏற்றுமதி

சென்னை விவசாய இலாகா டைரெக்டர் அனுமதிக்கும் 'பெர்மிட்' இல்லாமல், யாரும் சென்னை மாகாணத்துக்கு வெளியே பிண்ணாக்கு ஏற்றுமதி செய்தல் கூடாதென சர்க்கார் உத்திரவு பிறப்பித்துள்ளனர்.

கழக நடவடிக்கைகள்

ஜமீன் ஆலமரத்துப்பட்டி:— இவ்வூர் தி. மு. க. கிளையின் செயற்குழுக் கூட்டம், 21-12-49-ல் நடைபெற்றது. அதுபோது நடக்கவிருக்கும் திருச்சி மாவட்ட தி. மு. க. மாநாட்டுக்கு 3 தீர்மானங்களை அனுப்பிவைப்பதென முடிவு செய்யப்பட்டது.

* • *

பழனி:—இவ்வூர் கிளையின்செயற்குழுக் கூட்டம், 20-12-49-ல் தோழர் கே. ராமலிங்கம் தலைமையில் கழகக் கட்டிடத்தில் நடைபெற்றது. அதுபோது சில சொந்த அலுவலின் காரணமாக விளம்பர உறுப்பினர் தோழர் நா. அசன் முகம்மது, செயலாளர் தோழர் ரா. ராதா ஆகிய இருவரும் கொடுத்திருந்த ராஜிநாமா ஏற்றுக்கொள்ளப்பட்டது. இவர்களுக்குப் பதிலாக தோழர் இல பழனிச்சாமி செயலாளராகவும், தோழர் அ தமிழரசு விளம்பர உறுப்பினராகவும் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பின்பு, வருகிற பொங்கல் விழாவைச் சிறப்புறக் கொண்டாடவேதென்றும், அதற்கு வெளியூர் தோழர்களிருவரை அழைப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

மதுரை மாவட்டக் கழகத்திற்கப் பிரதிநிதிகளாகத் தோழர்கள் கே. ராமலிங்கம், கா. வெங்கடாசலம் ஆகிய இருவரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

* * *

தாத்தையங்கார்பேட்டை:- இவ்வூர் தி. மு. க. கிளையின் செயற்குழுக் கூட்டம், 20-12-49-ல் தோழர் சு. நல்லமுத்து தலைமையில் நடைபெற்றது.

அதுபோது, நடைபெறவிருக்கும் திருச்சி மாவட்ட மாநாட்டு விஷயாலோசனைக் குழுவுக்கு இக்கிளையின் பிரதிநிதியாகத் தோழர் சு. நல்லமுத்து அவர்களை அனுப்புவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

பின், 20 12-49 வரை கழகத்திற்குச் செலவான தொகை எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

இறுதியாக, திருச்சி மாவட்ட மாநாட்டிற்கு ஒரு தீர்மானம் அனுப்புவதென்று முடிவு செய்யப்பட்டு கூட்டம் முடிவுற்றது.

* * *

சூலூர்:—இவ்வூர் தி. மு. க. கிளையின் செயற்குழுக் கூட்டம், 20—12—49-ல் தோழர் எஸ். கே. கருப்பண்ணன் தலைமையில் நடைபெற்றது.

அதுபோது, ஜனவரி இறுதிக்குள் பொதுச் செயலாளரை அழைத்து ஒரு கூட்டம் நடத்துவதென்றும். இக்கிளைக் கழகத்திற்கு செயலுறுப்பினர் ஒவ்வொருவரிடமிருந்தும் மாதம் 12 அணா வீதம் வசூலிப்பதென்றும், முடிவு செய்யப்பட்டது.

* * *

அவன்புரம்:—இவ்வூர் கிளையின் செயற்குழுக் கூட்டம், 21-12-49ல் தோழர் நா. சிதம்பரநாதன் தலைமையில் 21—12—49 ல் நடைபெற்றது. அதுபோது. வருகிற பிப்ரவரி திங்களில் பொதுச் செயலாளரை அழைத்து துவக்க விழாவை நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

* * •

சலகண்டபுரம்:—இவ்வூர் தி. மு. க. கிளையின் செயற்குழுக் கூட்டம்: 21—12—49-ல் தோழர் அ. மு. அண்ணாமலை தலைமையில் நடைபெற்றது. அதுபோது, சென்ற மாதத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தின் வரவு செலவுக் கணக்கு பார்க்கப்பட்டது. பின்பு, தோழர்கள் டி. கே. சீனிவாசன், இரெ. இளம்வழுதி இருவரையும் அழைத்து பொங்கல் விழாவைச் சிறப்புற நடத்துவதென முடிவு செய்யப்பட்டது. (ச-செ)

சேலம் அம்மாபேட்டைமெயின் ரோடு:- இவ்வூர் கிளையின் வாராந்திர சொற்பயிற்சிக் கூட்டம், 18-12-49-ல் தோழர் ஸ்டாலின் ராமசாமி தலைமையில் நடைபெற்றது. அதுபோது "கல்வி" என்னும் பொருள்பற்றி தோழர்கள் நம்மாழ்வார், ராதாகிருஷ்ணன், வையாபுரி, அப்துல் ரஹீம், திருவேங்கடம், காளியப்பன், பழனிவேல், முத்து, கொண்டையா, அப்துல்சுக்கூர், ராமலிங்கம், சுந்தர், சுப்பையா. வள்ளியப்பன் ஆகியோர். சொற்பொழிவாற்றினர். (செ-ர்)

* * •

கோடம்பாக்கம்:— இவ்வூர் கிளையின் செயற்குழுக் கூட்டம் 24—12—49 ல் தோழர் இரா. கிருபாசங்கர் தலைமையில் தோழர் மு. இளைய பெருமாள் அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது.

அதுபோது இக்கழக வளர்ச்சி கருதி, சென்னை மாவட்டக் கழகத்திற்கு இக்கிளையின் சார்பில் முன்னர் தேர்ந்தெடுக்கப்பட்ட இரு பிரதிநிதிகளில் ஒருவராகிய தோழர் சி. நேசன் அவர்களுக்குப் பதிலாக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்களைத் தேர்ந்தெடுப்பதாக, தோழர் சா. துரைசிங்கம் கொண்டுவந்த தீர்மானம், தோழர் மன்னர் மணியால் வழிமொழியப்பட்டு, பெருவாரியான உறுப்பினர்களின் ஆதரவினால் நிறைவேற்றப்பட்டது.

பின்பு, கூடிய விரைவில் தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ. அவர்களைக் கொண்டு ஓர் பொதுக் கூட்டம் நடத்துவதென ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு நன்றி கூறலுடன் கூட்டம் முடிவுற்றது. (வி-உ)

* * *

சேலம் செவ்வாய்ப்பேட்டை: மேற்கு வட்ட நகர உட்கிளையின் செயற்குழுக் கூட்டம், தோழர் இ. ஆர். கிருஷ்ணன் தலைமையில் 22-12 49-ல் நடைபெற்றது. துவக்க விழாவின் வரவு செலவு பார்க்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது. வரவு செலவு விபரம்:- சந்தா, நன்கொடை மூலம் வரவு ரூ. 237-15-2 துவக்க விழாச் செலவும், மார்க்கெட் பொதுக்கூட்டச் செலவும் ரூ. 206-6 8 மீதி கையிருப்பு ரூ. 31-8-6 பின்பு கழக வளர்ச்சிக்கான 4 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, செயலாளர் நன்றி கூற, கூட்டம் முடிவுற்றது (வி-உ)

• • •

சலகண்டபுரம்—இவ்வூர் கிளையின் சார்பில் 22—12—49-ல் ஓர் அனுதாபக் கூட்டம் நடைபெற்றது. நீண்ட நாள் சுயமரியாதைக்காரரும், தோழர் ப. கண்ணன் அவர்களின் உடன்பிறந்தாருமாகிய இவ்வூர் தோழர் அ. ப. அர்த்தனாரி அவர்களின் திடீர்மறைவு குறித்து, தோழர்கள் ர. காதசாமி, மா. அர்த்தனாரி, கு. சி. கந்தசாமி, ப. செல்லப்பன், வீ. கிருட்டினன், ஆகியோர் பேசினர். பிறகு எல்லோரும் எழுந்து இரண்டு நிமிட நேரம் நின்று தங்கள் மரியாதையைத் தெரிவித்தனர். (து-செ)

அறிவிப்பு

"மாலை மணி"யில் வெளியிடுவதற்கென அனுப்பப்படும் திருமணம், பிறப்பு, பொரிடல், மறைவு, நன்றி அறிவிப்பு ஆகியவை பற்றின செய்திகள் யாவும் இனி **விளம்பரமாகவே** ஏற்றுக்கொள்ளப்படும். இவைகளுக்கு மட்டும் விளம்பரக் கட்டணம் ஒரு பத்தி, ஒரு அங்குலத்திற்கு ரு 2.

(ஆ-ர்)

அறிவிப்பு
ரெஜினா மூட்டைப் பவுடர், மூட்டைப்பூச்சி, எறும்பு முதலியவைகளை நாசமாக்கி, அயர்ந்த நித்திரை தருகிறது. சாம்பிள் டின் 1-க்கு 8 அணா ஸ்டாம்பு அனுப்பவும்
G. பழனியப்பமுதலியார், மதுரை

வானொலி

(29-12-49 வியாழக்கிழமை)

சென்னை
[211·8 மீட்டர்கள்]

காலை :
7-15 தமிழில் செய்திகள்
7-30 மகாதேவய்யர்—பாட்டு
8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
8-15 சினிமாப் பாட்டுகள் (இ.த.)
8-50 டி. கே. ராமமூர்த்தி—வயலின்

பிற்பகல் :
12 30 டி. அம்ருதவல்லி—பாட்டு
1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
1-40 சினிமாப் பாட்டுகள் (இ.த.)
2-00 தமிழில் செய்திகள்
2 45 குரல்வளை (இசைத்தட்டு)

மாலை :
4-00 ஆர். எம். சுந்தரம்—பாட்டு
5-30 இசை விழா ஒலிப்பதிவு
6-00 ஆங்கிலத்தில் செய்திகள்
6-20 அபிஷா சங்கரன்—பாட்டு

இரவு :
7-00 புல்லாங்குழல் கிளாரினெட்
7-15 தமிழில் செய்திகள்
7-30 சினிமாப் பாட்டு (இ. த.)
8-15 வெங்கடசாமி, வயலின் ஏ. கண்ணன் மிருதங்கம்
9-00 ஆங்கிலத்தில் செய்திகள்
9- 0 இசை விழா (ஒலிப்பதிவு)
10-30 முடிவு

திருச்சி
[895·8 மீட்டர்கள்]

காலை :
7-15 தமிழில் செய்திகள்
7-30 ஜி. சரஸ்வதி—வீணை
8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
8-15 மணி ஐயர் (இசைத்தட்டு)
8-50 பி. எஸ். சாவித்ரி—பாட்டு

பிற்பகல் :
1-00 சதம்பம் (இசைத்தட்டு)
1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
1-40 பெண்ணுலகம்
2-00 தமிழில் செய்திகள்
2-10 ஆர். மீனாட்சிசுந்தரம்—பாட்டு

மாலை :
5-00 பி. எஸ். சாவித்ரி—பாட்டு
5-30 சென்னையில் உள்ளபடி
6-00 ஆங்கிலத்தில் செய்திகள்
6-15 ஜி. சரஸ்வதி—வீணை
6-30 கிராம நிகழ்ச்சிகள்

இரவு :
7-15 தமிழில் செய்திகள்
7-45 டி. பி. மாணிக்கவாசகம்—பேச்சு
8-00 புதிய வெளியீடு (இ. த.)
8-15 சென்னையில் உள்ளபடி
9-00 ஆங்கிலத்தில் செய்திகள்
9-15 பியானோ—வயலின்
9-30 சென்னையில் உள்ளபடி
10-00 முடிவு.

மறைவு

முல்லைக்கொம்பை, டிச. 20— முல்லைக்கொம்பைத் தோழர் எம். பி. வடிவேல் அவர்களின் சகோதரியும், தொகரப்பள்ளி, தோழர் டி. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் தம்பி இராமமூர்த்தியின் வாழ்க்கைத் துணைவியுமான தோழியர் சரோஜனி அம்மையார் 13-12 49ல் திடீரென தனது 28-வது வயதில் இயற்கை எய்தினார். அன்னாரின் இறுதிச் சடங்கு 26—12—49ல் தொகரப்பள்ளியில் நடைபெறும்.